

# சங்கமம்

கலை இலக்கிய அறிவியல் இதழ்


ஆனந்த வருடம்
ஆவணித் திங்கள்

○

1974
ஆகஸ்ட்

இதழில்.........


- நீங்காத நினைவுகள்
- தாய்மை வெள்ளம்
- கல்லும் கதையும்
- பேராசிரியர் கணபதிப்பிள்ளை
- பலவீனம்
- இளமை முடிவதில்லை

விலை ரூபா 1/-

தி. பிண். சிறுகதை. பு. ூ.

**புகைப்படத் தேவைகள்**

எதுவானாலும்

**"செல்லம்ஸ்"**

94, 96, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 436



### சங்கமம் நிர்வாகக் குழு

*பதிப்பாலோசகர்கள்:*

**த. சண்முகசுந்தரம் B. A. (Cey.), Dip-in-Ed (Cey.)**
உதவி அதிபர், மகாஜனக் கல்லூரி

**ஆ. சிவநேசச்செல்வன் B. A. (Hons.)**
விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி

*துணையாசிரியர்கள்:*
**க. நாகேஸ்வரன்  சு. சரவணபவன்**

*நிர்வாக ஆசிரியர்:*
**வீ. ஸ்ரீகதிர்காமநாதன்**

*செயலாளர்:*
**சி. செ. சண்முகநாதன்**

*நிர்வாக அதிபர்:*
**பொ. இரகுபதி**

# சங்கமம்

''சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.'' — பாரதியார்

| | | |
|---|---|---|
| மலர் 1 | ஆனந்த வருடம் | 1974 |
| இதழ் 1 | ஆவணித் திங்கள் | ஆகஸ்ட் |


## நுழைவாயில்

''சங்கமம்' வெளிவரவிருக்கின்றது.''

எமது இதயவேட்கையாக வெளிவந்த இக்கருத்தைக் கேட்டு,

சிலர் பாராட்டினார்கள்;

சிலர் எச்சரித்தார்கள்;

வேறுசிலர் நையாண்டி செய்தார்கள்;

இரு ஆண்டுகளுக்குமுன் தமிழகத்துச் சஞ்சிகைகள் தடை செய்யப்பட்டு ஈழத்தில் இலக்கியத்தாகம் பெருகியகாலத்தில் முகிழ்த்த மலர்களில் முளையிலே கருகியவை பல. ஓரிரு மலர்களோடு வாடியவை சில;

பத்திரிகைக் காகித விலையுயர்வு; அச்சகச்செலவுகள்; வாசகர் வட்டத்தை ஏற்படுத்துவதிலுள்ள சிக்கல்கள்... இவற்றிற்கு மத்தியில் 'பத்திரிகை உலகு' அளிக்கக்கூடிய கசப்பான உண்மைகளை அறிந்திருந்தும் நாம் இம்முயற்சியில் துணிந்து இறங்கியுள்ளோம்.

ஏன்...?

ஈழத்து இலக்கிய உலகில் சஞ்சிகைகளைப் பொறுத்தவரை ஓர் 'இடைவெளி' ஏற்பட்டுள்ளது. இலக்கியப் போக்கிலும், கல்வியுலகிலும், சில தேவைகள் எழுந்துள்ளன;



191

இந்த இடைவெளி நிரப்பப்பட வேண்டும்;

தேவைகள் பூர்த்திசெய்யப்படவேண்டும். இம் முயற்சியில் நாம் வெல்லலாம்; தோற்கலாம்; முயல்வது நம்கடன்.

இந்த இதழில் 'நீங்காத நினைவுகள்' என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் புலவர் ஒருவர் பற்றிய நினைவின் அலைகள், உணர்வு பூர்வமான கவிதைகள், சிறந்த பின்னணியில் அமைந்த சிறுகதைகள், மாணவர்களை மையமாகக்கொண்ட கட்டுரைகள், 'கல்லும் கதையும்' — நல்லூர் பற்றிய தொல்பொருளியற் கட்டுரை ஆகியவை இடம்பெறுகின்றன. இவற்றைத் தந்துதவியவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றி.

விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தகப்பெருமக்களுக்கும், அழகானமுறையில் அச்சேற்றிய அச்சகத்தினருக்கும் நன்றி.

எமது சஞ்சிகையின் பெயரோ 'சங்கமம்'<br>
எல்லாத் துறைகளும் சங்கமிக்கும் இடம்;<br>
பழமைக்கும் புதுமைக்கும் பாலம்.<br>
''சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்<br>
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்''

— என்பது எங்கள் கோட்பாடு.

நல்லவை எங்கெங்குண்டோ அவை நிச்சயம் எம்மால் மனமுவந்து ஏற்கப்படும்.

தொடர்ந்து எமது முயற்சிக்கு ஆதரவு நல்கி ஊக்குவிக்குமாறு வாசகப்பெருமக்களை வேண்டிக்கொள்கின்றோம்.

அட்டைப் படம்:

மேலே : சங்கிலித்தோப்பு மந்திரிமனை

கீழே : வ. மு. இரத்தினேஸ்வர ஐயர்

# காசு வாங்காமல் கற்பித்த பெரும் புலவர்

நாவலரவர்களின் வழிநின்று யாழ்ப்பாணத்தில் தமிழ் வளர்ச்சிக்கு உழைத்தவர் சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர். (1854 — 1922) புலவரவர்களைப்பற்றி அவரின் மாணுக்கர் வ. மு. இரத்தினேஸ்வர ஐயரவர்களின் நினைவில் உதித்தவை.

ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்து சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம் முதலியவற்றைப் பாடிய வரத பண்டிதரின் வழித்தோன்றலும் உடுவில் தமிழ்ப்புலவருமாகிய வ. மு. இரத்தினேஸ்வர ஐயா அவர்கள் 1882-ம் ஆண்டு மே மாதம் 27-ந் திகதி பிறந்தவர். இப்பொழுது வயது 92. யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் சிறு ஓலைக் குடிசையில் வசித்து வருகிருர். வயது முதிர்ச்சியினுல் காது கேட்காது. அவர் பேசுவதும் விளங்காது. இந்நிலையில் அவருடன் உரையாடி விபரங்களைப் பெறுவதற்கு மிகுந்த சிரமப்பட்டேன். இந்த முதிர்ந்த பிராயத்திலும் குன்றுத ஆர்வத்துடன் எமக்கு உதவினுர். நான் என்ன நோக்கத்துடன் வந்துள்ளேன் என்பதை எழுதிக் காட்டித்தான் விளங்கப் படுத்த வேண்டியிருந்தது. ஒரு தாளில் "குமாரசுவாமிப் புலவரைப் பற்றிக் கூறுங்கள்'' என்று பெரிதாக எழுதி அவரிடம் கொடுத்தேன். குமாரசுவாமிப் புலவர் என்ற பெயரைக் கண்டதுமே கண்களில் ஒளிவீச "எழுதித் தருகிறேன்'', என்று கூறிக்கொண்டே தாளையும், பென்சிலையும் வாங்கி எழுதத் தொடங்கிவிட்டார். நடுங்கும் கரங்களுடனும், பிதற்றும் வாயுடனும் ஐயா அவர்கள் கூறியவை ஒரு சோக காவியம். அவர் எழுதியவற்றையும் பின் வாயாற் கூறியவற்றையும் தொகுத்து இங்கே தருகிறேன்.

"நான் சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரின் பழைய மாணவன். புலவரவர்கள் 1902-ம் ஆண்டு காவிய பாடசாலேயின் தலைமையாசிரியரான பொழுது அதில் முதலாவது மாணவனுகச் சேர்ந்தவன் நான். எங்கள் வகுப்பில் பன்னிரண்டு பேர் படித்தார்கள். அப்பொழுது நாவலர் பாடசாலேயில் 300 பேர் வரையில் கல்வி கற்றனர். முற்கூறிய பன்னிரண்டு பேரில் நானும் வேதாரணியம் இளேயதம்பியும் காவிய பாடசாலேயில் இருந்து முதன்முதல் வெளியேறிய பண்டிதர்கள். எங்கள் செலவுகள் யாவற்றிற்கும் கைலாசபிள்ளேதான் (நாவலருடைய பெருமகனும் வித்தியாசாலே முகாமையாளருப்) பொறுப்பு. இப்பொழுது உள்ள பாடசாலேக் கட்டிடத்தை அவர் தான் கட்டினுர். சைவம் ஒருவரின் வீட்டில் எங்களுக்குச் சாப்பாடு; இரவு கைலாசபிள்ளே வீட்டில் தான் படுக்கை.

குமாரசுவாமிப் புலவர் மற்றைய ஆசிரியர்களேப் போன்றவரல்லர். படிப்பில் வலுகவனம். முதல் நாள் படிப்பித்து விட்டுச் சென்றுல் மறுநாள் வந்தவுடன். 'இரத்தினேசுவர ஐயரே! நேற்றுப் படிப்பித்தது என்ன?' என்று கேட்பார். நன்னூல், தொல்காப்பியம் போன்ற இலக்கணங்களேயும், இலக்கியங்களேயும் கற்றேன். புலவரவர்கள் இலக்கணம், இலக்கியம், வடமொழி முதலியவற்றில் மிக்க வல்லமை உடையவர்; சந்தேக விபரீதமின்றிக் கற்பிப்பார். நான் நன்கு பாடுவேனுகையால் படிக்கும் காலத்திலேயே புராணப்படிப்புகளுக்குக் கூட்டிச் செல்வார். புலவருக்கு இராகம் வராது; நானும் பண்டாரமாணிக்கமும் தான் (மாணிக்கத்தியாகராச பண்டிதர்) நன்கு பாடுவோம்.

இவ்வாறு ஐந்து ஆண்டுகள் அவரிடம் படித்தேன்; 1907-ம் ஆண்டு புலவரிடம் படித்துமுடித்து வெளியேறி இந்தியா, பர்மா, மலேயா முதலிய இடங்களில் வேலேபார்த்த பொழுதும் புலவருடன் கொண்டிருந்த தொடர்பு நீடித்தது. மயிலணி வித்தியாசாலேயில் புலவருடைய சிபாரிசால் எனக்கு ஆசிரியர் வேலேயும் கிடைத்தது.

1911-ம் ஆண்டு சேர். பொன் இராமநாதன் அவர்கள் இராமநாதன் கல்லூரியை நிறுவிய பொழுது என்னேத் தமிழ் உபாத்தியாயராக்கினுர். இராமநாதன்துரை சற்றுப் புகழ் விரும்பி. தான் சொன்னதை மற்றவர் கேட்கவேண்டும் என்று விரும்புபவர். அவர் அப்பொழுது திருக்குறளுக்கு உரை எழுதிக் கொண்டிருந்தார். இரவு ஏழு மணிக்குப்பின் என்னேவந்து எழுதும்படி கூறுவார். திரும்பிச் செல்ல ஒரு மணியாகும். எனவே நான் ஒருநாள் 'எசமான்

என்னால் இந்தவேலை செய்யமுடியாது எனக்குச் சுகமில்லை; இரவு நேரம் திரும்பிச் செல்வது சிரமம்' என்று கூறினேன். அவர் உடனே என்னை நிமிர்ந்து பார்த்தார். 'ஒரு எசமான் சொல்கின்றபடி நடக்காவிட்டால் நீர் எப்படிப் பிழைக்கப் போகின்றீர்?' என்று கேட்டார். நான் உடனே 'எசமான் எனக்கிந்த வேலை வேண்டாம்.' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டேன். வேலையில்லாமல் நான் அவதிப்பட்டபொழுது குமாரசுவாமிப் புலவர்தான் எனக்கு உதவி புரிந்தார். அவரும் கைலாசபிள்ளையுமாகச் சேர்ந்து ஆலோசித்துச் சிதம்பரத்தில் உள்ள சைவப் பிரகாசவித்தியாசாலையில் எனக்கு ஆசிரியப்பதவி பெற்றுக் கொடுத்தார்கள். சிதம்பரத்தில், புலவரது மாணவனென்றறிந்ததும் எனக்கு மிகுந்த வரவேற்பு. சிதம்பரம் போனவன்றே பிரசங்கம் செய்தேன்; இந்தியாவில் புலவரது மாணுக்கன் என்று எனக்கு மரியாதை செய்தார்கள். புலவரது மாணுக்கன் என்றவுடன் "ஐயா அடிக்கடி எங்களை வந்து பாருங்கள்' என்று பெரிய மனிதர்களெல்லாம் கூறுவார்கள். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் புலவருக்கு நல்ல செல்வாக்கு. நான் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குப் போக நேரும் பொழுதெல்லாம் புலவரவர்கள், 'எனது மாணுக்கராகிய இரத்தினேஸ்வரஐயர் உங்கு வருகிறுர்' என்று கடிதம் எழுதி விடுவார். ஆதீனங்களெல்லாம் சென்றேன், பட்டும் போர்த்தினுர்கள்.

பிறேசிடென்சிக் கல்லூரிக்குச் சென்ற சமயம் சாமிநாதையர் அங்கு கற்பித்துக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் யார்? எந்த ஊர்? என்றுகேட்டார். 'யாழ்ப்பாணம், குமாரசுவாமிப் புலவரது மாணுக்கன்' என்றதும் 'ஐயா இருங்கள் இருங்கள் உங்களுடன் ஆறுதலாகக் பேச வேண்டும். வீட்டில் வந்து சந்திக்கிறேன்' என்றுர். அப்பொழுது கி. வா. ஜகந்நாதன் போன்றவர்கள் சாமிநாதையருக்கு முன்னுல் கை கட்டிக் கொண்டு நின்றவர்கள். சமீபத்தில் இலங்கை வந்தபொழுது என்னைக் கண்டு "ஐயா உங்களை நான் இன்னும் மறக்கவில்லை" என்று கூறி அளவளாவிச்சென்றுர்.

குமாரசுவாமிப் புலவர், சேர். பொன். இராமநாதனை அதிகம் மதிப்பதில்லை. இதனுல் அவருக்குப் புலவர் மீது சிறிது மனத்தாங்கல். அப்படியிருந்தும் இராமநாதனின் தலைமையில் ஒரு மாநாடு நடந்தபொழுது புலவரவர்கள் என்னைப் பேசும்படி அனுப்பி 'எனது மாணுக்கராகிய இரத்தினேசுவரஐயர் உரையாற்றுவார்' என்று இராமநாதனுக்கு அறிவித்தபொழுது அவர் என்னை வரவேற்று வண்டியில் அழைத்துச் சென்றுர். அன்று "ஈழமண்டலப்புலவர்" என்பதைப் பற்றிப் பேசினேன்.

எனக்கு அந்தக் காலத்தில் 'நான்' என்ற எண்ணம் கொஞ்சம் இருந்தது. புலவர் அப்படிப்பட்டவரல்லர். அவர் எளிமையானவர். 'ஓய்! ஐயரே நான் சொல்வதைக் கேளும். நான் படித்தவன் என்று நினைக்கக்கூடாது.' என்று அடிக்கடி எனக்குக் கூறுவார்.

நான் பேசும் பொழுது கிறுகிறு என்று பேசுவேன். பேசவந்த விடயத்திற்குள் நேரடியாகவே புகுந்துவிடுவேன். நீண்ட நேரம் பேசுவேன். ஒருநாளில் ஐந்து தடவைகளும் பிரசங்கம் பண்ணியிருக்கிறேன், புலவர் கூட 'ஐயர் விடமாட்டார்' என்று அடிக்கடி கூறுவார். ஆனால் புலவர் பேசுவது என்னைப் போன்றல்ல. அவர் நிறுத்தி, நிறுத்தி மிக ஆறுதலாகவும் மெதுவாகவும் பேசுவார்.

புலவருடைய இறுதிக்காலத்தில் மதிபாலன் பட்டி பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரைச் சந்தித்து தான் இந்தியாவுக்கு வருவதை அறிவிக்கும்படி என்னிடம் கூறினர். கதிரேசன் செட்டியாரும் பெரும் புலவர். சிதம்பரம் பல்கலைக் கழகத்தில் (அண்ணாமலை) பண்டிதராக இருந்தார். நான் புலவரின் மாணாக்கன் என்றவுடன் மதிப்புக் கொடுத்து வரவேற்றுப், புலவரின் வருகை பற்றி மகிழ்ச்சியும் தெரிவித்தார். ஆனால் அதற்கு முன் புலவர் இறந்தமையால் இச்சந்திப்பு நிகழவில்லை.

இராமநாதபுரம் அரசர் பாண்டித்துரைத்தேவர் புலவரையும், இராகவஐயங்காரையும் இருகண்களாகக் கருதியவர். புலவருடைய நூல்கள் சில பாண்டித்துரைத்தேவரின் அபிமானத்தில் வெளியானவை. மதுரைத் தமிழ்ச்சங்கமும் புலவரைக் கண்ணாகக் கருதியது. நான் 38 வருடம் இந்தியாவில் வசித்தமையால் புலவருக்கு இந்தியாவிலிருந்த செல்வாக்குப் பற்றி எனக்கு நன்கு தெரியும். புலவர் இறந்தபொழுது நான் செட்டிநாட்டில் ஏதோ ஒரு சிற்றூரில் இருந்தேன். இரண்டுகவிதைகளை எழுதி அனுப்பத் தான் முடிந்தது.

புலவர் என்மீது மிகுந்த அன்பும் ஆதரவும் உடையவர். நான் புலவரை என்றுமே மறந்ததில்லை. போகுமிடமெல்லாம் 'புலவரது மாணாக்கன் என்று சொல்லிக் கொள்வதில் எனக்கும் பெருமை' என்று கூறிய பொழுது இரத்தினேசுவர ஐயரின் கண்களில் நீர் துளிர்த்தது.

தொடர்ந்து தனது வாழ்க்கையைப் பற்றி ஐயா அவர்கள் கூறியவை அவசியம் இங்கு கூறப்படவேண்டிய தாகையால் அவற்றையும் இங்கு தருகிறேன்.

ஐயரது பழைய பெருமையும் அவரது இன்றைய நிலையையும் நோக்கும் பொழுது தமிழின் நிலை இவ்வாறிருக்கிறதே என்று வருந்தவேண்டியிருக்கிறது,

''நான் ஏழைப் பிராமண குடும்பத்தில் பிறந்தவன். ஏதோ புலவர் போன்ற படித்தவர்களைக் கும்பிட்டு நானும் சிறிது கற்றுக் கொண்டேன். பர்மாவில் அரசாங்கப் பாடசாலைப் பரிசோதகராக விளங்கினேன். விசாகப்பட்டினம் தொடக்கம் கன்னியாகுமரிவரை பிரசங்கங்கள் செய்தேன். சென்ற விடமெல்லாம் யாழ்ப்பாணத்து ஐயர் வந்து விட்டார் என்று மாலை போட்டு வரவேற்றுப் பல பிரசங்கங்கள் நடத்துவிப்பார்கள். இராமநாதபுரம் அரசரே பல தடவை வரவேற்று, நானும் அம்மாவும் (மனைவி) தங்குவதற்கு வீட்டு வசதி உணவுவசதி யெல்லாம் செய்துதந்து பிரசங்கம் செய் வித்தார்கள். இராமநாதபுரம் அரசரால் சாமிநாதையர் கதிரேசன் செட்டியார் முன்னிலையில் 'பிரசங்க சபாமணி' என்ற பட்டமும் கொடுத்தார்கள். இந்தியாவின் இராசப் பிரதிநிதி (Viceroy) ஒரு பாராட்டுக் கடிதமும் கொடுத்தார். இன்று எனக்கு வயது சென்று விட்டது. உண்ண உணவில்லை, வயிற்றிலே புண். மருந்துக்குக் காசில்லை. அம்மா (மனைவி) இறந்து இருபது வருடம். பராமரிக்கயாரு மில்லை. இருப்பது வாடகைக் குடிசை'' என்று கூறியபண்டிதருக்கு நான் இயன்ற சன்மானமளித்து விடைபெற்ற பொழுது பண்டிதர் அழுதுவிட்டார்.

''குமாரசுவாமிப் புலவர் காசுவாங்காமல் எனக்குப் படிப்பித் தவர். தமிழ்நாடு முழுவதும் காசுவாங்காமல் நான் பிரசங்கம் செய்தேன். என் நிலைஇப்படியாகியதே'' என்று உருகிய பண்டிதர் ''தமிழைக் கைவிட்டுவிடாதீர்கள்'' என்று விடைகொடுத்தார்.

வரதபண்டிதரின் வழித்தோன்றல்; குமாரசுவாமிப் புலவரிடம் தமிழ் படித்தவர்; விசாகபட்டினம் தொடக்கம் கன்னியாகுமரிவரை பிரசங்கம் செய்தவர்; செட்டிநாட்டிலே பெருஞ் செல்வாக் கோடு வாழ்ந்தவர்; தமது அந்திம காலத்தில் ஒருவேளை உணவிற்கு வழியின்றி வாழ்கின்ருரென்ருல், பிழை தமிழ்ச்சமுதாயத்தில் தான். இந்துசாதனத்தில் பண்டிதரின் நிலையைப்பற்றிக் கூறி நிதிசேகரிக்க முயற்சித்தார்கள்; அதுவும் அதிகம் பயனளிக்கவில்லை;

தொகுப்பு: போஞ - ஈஞ

# பவள மல்லிகைப் பூ

நீலாவணன்.

தவள வானில் ஒளிரும் தாரை
தளர் நடைபயில் இரவின் வேளை
தவறி வாசல் தனில் உதிர்ந்தன
தலையில் தூய மணம் கமழ்ந்தன!
பவள மல்லிகைப்பூ- கமகம......
பவள மல்லிகைப் பூ!

பனியின் கண்ணீர் சொரியும் வானம்
பரிவின் பொங்கிய துயரம் போலும்!
இனிய தென்றல் மருவி வீசும்
இணையவண்டுகள் சுருதி கூட்டும்
பவள மல்லிகைப்பூ-பட்டுப்
பவள மல்லிகைப்பூ!

பனியின் ஈரம் பசந்து காயும்
பருகும் வண்டுகள் அசந்து ஓயும்!
இனிய வாழ்வும் கசந்து தூய
இதழ்கள் சோரும்! அழுது வீழும்!
பவள மல்லிகைப் பூ-பாவம்
பவள மல்லிகைப்பூ!

# வலிமை

சேரன்

வானம் கருப்பாய்
முகில்திரண்டு மழை பொழிய
என்னுடைய ஓலைச்
சிறு கொட்டில் நனைகிறது......!
என்றாலும்—என் வீட்டு......
ஓலை விளிம்பின்
நுனியால் மழைத்துளிகள்
ஒன்றன் பின்னொன்றாய்
ஒழுங்காய்......
நிலம் வீழ்ந்து.......
காய்ந்த தரையை......
மெதுவாய்த் துளைக்கிறது......
கட்டாந் தரையைத்
துளைத்துப் பிளக்கிறது......!

# தாய்மை வெள்ளம்

த. சண்முகசுந்தரம்

பயங்கரமான மேகங்கள் வந்து குவியத் தொடங்கின. ஆண்டவன் படைத்த மேகங்கள் அல்ல அவை. அரசியல்வாதிகள் படைத்த அழிவு மேகங்கள் அவை. ஆண்டவன் படைத்த மேகங்கள் மழை பொழியும், மழை மெத்தினால் வெள்ளம் வரும். சிறு வெள்ளம் பெருவெள்ளமாகும். பெருவெள்ளம் அழிவை ஏற்படுத்தும். பெரும் வெள்ளம் சுமந்துவந்த வண்டலும் ஈரலிப்பும் வெள்ளம்வடிந்த பின் பயிரை வளரச் செய்யும். வகுப்புவாதக் கலவரம் பயங்கரமான இரத்தமழை பொழியச் செய்யும். சிறு வெறுப்பு மேகம் திரண்டு பெரும் மேகமாகும். சிறுவெள்ளமாகியது பின்னர் இனக்கலவரப் பெருவெள்ளமாகும். கலவரம் ஓய்ந்ததும் மனிதாபிமானம், அன்பு, என்னும் பயிர், வளர முடியாத அரசியல் பாலைவனம் உருவாகும். இந்த வெள்ள அழிவிற்குக் கதறீன் சிங்கோ எதிர்ப்புத் தெரிவித்தாள். கடும் வெள்ளமும், புயலும்சேர அரசியல் தலைவர்களான பெரும் பாலை மரங்கள் அடியோடு சாய்ந்தன. சிறு கோரை தப்பியது அந்தச் சிறு கோரை தான் கதறீன் சிங்கோ. அவள் செய்த தியாகம் வீர காவியம்.

கதறீன் சிங்கோ அழகி; கதறீன் சிங்கோ வறியவள். வறுமையும் அழகும் இடரை விளைவிக்கும் கூட்டு. இதனால் பதினெட்டு வயதில் கதறீன் சிங்கோ முரடன் ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டாள். கூர்க்கத்திக்கு இரையான மல்லிகைக் கொழுந்து அவள். அடுத்தடுத்து மூன்று பெண் குழந்தைகளுக்கு அவள் தாயானாள். கணவன் என்ற முரடன் மாயமாக மறைந்தான். நோய் வாய்ப்பட்டுக் குழந்தைகள் இரண்டு இறந்தன. ஒன்று மாத்திரம் தப்பிப்பிழைத்துப் பத்து வயதை எட்டியது. அதனைப் படிக்கவைக்க வேண்டும் என்ற ஆசையால் கதறீன்சிங்கோ வீட்டு வேலைக்காரியானாள். வீட்டு வேலைக்காரி என்றால் அரசாங்க எழுதுவினைஞர் அம்பலவாணரின் வீட்டு வேலைக்காரி. வீட்டு வேலைக்காரியை வைத்திருக்கக்கூடிய சம்பளம் அம்பலவாணருக்கில்லை, அம்பலவாணரின் மனைவி செந்தில்நாயகி. இந்தச் செந்தில்நாயகி வாழைப் பழக் கடைக்காரர் வைத்திலிங்கத்தின் மகள். பெரிய உத்தியோகத்தில் அமர்ந்திருந்த இளைஞர்கள் செந்தில் நாயகியின் கையைப் பிடிக்க மறுத்தனர். சீதனம் லட்சக்கணக்காக அவளுக்கு இருந்தது. பெண் அழகில்லை என்பது ஒரு காரணம், மற்றக் காரணம் வாழைப் பழ வியாபாரிக்குச் சமுதாயத்தில் கௌரவமான உயர்நிலை இல்லை என்பது. எனவே சொந்த மருமகன் அம்பலவாணரை மாற்று வழியில்லாமல் வாழைப் பழ முதலாளி தெரிந்தெடுத்தார். கொழும்பிலே வீடுவளவு, மோட்டார் வண்டி, தொலை பேசி, குளிர் சாதனப்பெட்டி, எல்லாம் இருந்தன. அம்பலவாணருடன் மாமனார் வைத்திலிங்கமும் இருந்

தார். குறையில்லாத வாழ்வு அம்பலவாணருக்கு. மருமகனுடைய காற்சட்டையைப் பார்த்து மாமனார் வியந்தார். மாமனாரின் நான்கு முழ வேட்டிக்கு மருமகனார் மதிப்புக் கொடுத்தார். கதறீன் சிங்கோ வேலைக்குவந்த நாள் தொடக்கம், செந்தில் நாயகி அவள்மீது மிகவும் அன்பாக இருந்தாள். அதற்குக் காரணமும் இருந்தது. செந்தில் நாயகி வறுமையின் சாயலில் வளர்ந்தவள். வறுமை என்னும் நீரோட்டத்தில் எதிர் நீச்சல் அடித்தவர் வைத்திலிங்கம். பழமையை அவர் மறக்கவில்லை அம்பலவாணர் இளமையில் அரிசிச் சோற்றை அதிகம் காணாதவர். இந்த மூவருக்கும் இருந்த எளிமை கதறீனைக் கவர்ந்தது. கதறீனின் நேர்மை இந்த மூவரையும் கவர்ந்தது. செந்தில்நாயகிக்கு இரண்டு வயதில் ஒரு குழந்தை இருந்தது. அந்தக் குழந்தை கதறீனுடன் ஒட்டிய வண்ணம் இருந்தது.

அம்பலவாணர் ஒருநாள் லீவு வாங்கினார். வார இறுதியில் கண்டிக்குப் போய்வர திட்டமிட்டார் வைத்திலிங்கம். ஆனால் குழந்தைக்குச் சற்றுக் காய்ச்சலாக இருந்தது. எனவே குழந்தையை வைத்துக்கொண்டு கதறீன் வீட்டில் நின்றாள் அம்பலவாணரும், வைத்திலிங்கமும், செந்தில்நாயகியும் கண்டிக்குப் காரிலே புறப்பட்டனர். அவர்கள் புறப்பட்டு இரண்டு மணி நேரத்திற்கெல்லாம் கொழும்பை வகுப்புவாதக் கலவரப் பேய் மழை பிடித்துக் கொண்டது. அரசியல்வாதிகள் என்னும் கடவுளர் படைத்த வகுப்புவாத மேகம், குண்டர்கள் என்னும் ஆலங்கட்டி மழையைப் பெய்தது. பல்லாயிரக்கணக்கில் சிறுபான்மை மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர். குண்டர்களின் படை ஒன்று அம்பலவாணரின் வீட்டைச் சுற்றி வளைத்தது. அங்கு ஒருவரும் இல்லை என்பதை அப்படை கண்டறிந்தது. கதவுகள் பெயர்க்கப்பட்டன. சாளரங்கள் நொறுங்கின. கதறீன் சிங்கோ நடுங்கி நடுங்கி வந்தாள். பெரும்பான்மை இனமாகப் பிறந்ததின் பெருமையை அவள் அப்போது உணர்ந்தாள். அதில் அவளுக்குத் தெம்பும் பிறந்தது. குண்டன் ஒருவன் கதறீனை நோக்கி வந்தான்.

''யார் குழந்தை இது?'' என்றது முரட்டுக் குரல்.

''என் குழந்தை'' என்றது மெல்லிய குரல்.

''உண்மையா?'' என்றது முரட்டுத் தொண்டை

''உண்மை'' என்றது தாய்மை விம்மிய நெஞ்சு.

''சரி வெளியே வா'' என்றன முரட்டுத் தொண்டைகள் பல.

கதறீன் சிங்கோ குழந்தையுடன் வெளியே போனாள். வகுப்வாதக் கருமேகம் அழிவு மழை பெய்தது. வாழைப்பழ முதலாளியின் அழகிய பங்களாவை நெருப்புக் கடவுள் கௌவிக் கொண்டான். ஓடிய கதறீன் நான்குநாளாக எங்கோசேரிவாழ் சிநேகிதியின் வீட்டிலிருந்தாள். தன் கையிலிருந்த தாயத்தை விற்றுப் பிள்ளைக்குப் பால்வாங்கி ஊட்டினாள். கண்டியில் அகப்பட்ட வைத்திலிங்கம் தத்தளித்தார். அவரது குடும்பம் கொழும்பு திரும்ப முடியவில்லை. மகாவலி பெருகவில்லை, களனி உடைக்கவில்லை. மக்களின் வெறுப்புப் பெருகியது. அன்பு என்னும் அணைக்கட்டை

உடைத்து இனவெறி வெள்ளம் பாய்ந்தோடியது. எல்லாம் வற்றி வடிந்த பின்னர் வைத்தி லிங்கம் குடும்பம் கொழும்பு திரும்பியது. இனக் கலவர வெள்ளம் ஒரு பக்கம், செந் தில்நாயகியின் கண்ணீர் வெள் ளம் மறுபக்கம். ஏதோவொரு உள்ளுணர்வு தூண்டக் கதறீன் சிங்கோ அரை குறையாக எரிந்து கருகிய வைத்திலிங்கம் வீட்டுப் பக்கம் வந்தாள். அதே வேளை வைத்திலிங்கத்தின் மோட்டார் வண்டியும் வந்து நின்றது.

''அம்மா'' என்றது குழந்தை. செந்தில்நாயகி அழுதாள்.

''குட்டி...! குஞ்சு.! உன் அம்மா இவள் தான்'' என்றாள் செந்தில்நாயகி. வைத்திலிங்க மும் அம்பலவாணரும் கதறீ னைக் கண்டனர். நடந்ததைக் கேட்டதும் கதறீனை விழுந்து விழுந்து கும்பிட்டனர்; கதறீ னும் அழுதாள். அன்பு வெள் ளத்தில் தாய்மைவெள்ளம் சங் கமாயிற்று. கதறீனின் பத்து வயது மகளுக்கு அம்பலவாண ரின் வீட்டில் நிரந்தரமான இடம் கிடைத்தது. இன ஒற் றுமை வெள்ளம் அங்கு சங்கம மாகித் தேங்கிச் சகோதரத்துவ வாழைமரத்தை வளர்த்தது. அந்த வாழைப்பழத்தை உண்டு சுவைக்க யாராவது அரசியல் தலைவர்கள் முன்வருவார்களா என்று வைத்திலிங்கம் ஏங்குகி றார். அந்த வாழை மட்டும் வெடித்துப் பெருக வேண்டும் என்பது வைத்திலிங்கத்தின் கனவு. அந்த மட்டத்தைக் காப் பாற்றக் கூடியவர்கள் கதறீனைப் போன்ற ஏழைகள் என்பதை வைத்திலிங்கத்தின் குடும்பம் நன்றாக உணர்ந்தது.

கல்லும் கதையும்

## வரலாற்றின் பின்னணியில்......

## நல்லூர்

வளவர்கோன்

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலே மகோற்சவம். நண்பர் களுடன் கோயில் வீதியிலே உலாவருகின்றேன். மின்சார வெளிச் சங்கள், சரசரக்கும் பட்டுப் புடவைகள், கண்ணுக்கெட்டிய தூரம் வரை மனிதர்கள், இவற்றின் பின்னணியில் ஓங்கி நிற்கும் கோபுரங் கள்...... காவிரிப்பூம் பட்டினத்து இந்திரவிழா இப்படித்தான் இருந்திருக்குமோ! ஒருகணம் இந்தக் காட்சி மறைகின்றது. சில நூறு ஆண்டுகள் பின்னோக்கிச் செல்கின்றேன்.

தமிழரசர் காலத்து நல்லூர்
பரராசசேகரனும், செகராசசேகரனும் சிறப்புடன் ஆண்ட நல்லூர்
அரசகேசரிப் புலவர் தமிழாய்ந்த நல்லூர்

கந்தசுவாமி கோயிலும், சட்டநாதர் ஆலயமும், கைலாயநாதர் இருப்பிடமும், வீரமாகாளி சந்நிதானமும் கம்பீரமாகத் திகழ்ந்த நல்லூர்......

இந்த இடைக்காலம் தான் எவ்வளவு கொடியது. இன்று இவற்றின் தடயங்கள் கூடக்கிடைக்கவில்லையே. அந்நியரின் கலையழிவுக் கொள்கைக்குப் பாத்திரமானதோ? மிஞ்சியவை...... வெறும் கற்குவைகள். சிந்தனையின் முடிவில் எஞ்சியவை...... கண்ணீர்த் துளிகள்.

நல்லூர் எப்பொழுது தொடக்கம் யாழ்ப்பாண இராசதானியாக விளங்கியதென்பதும் சிங்கை நகரும் நல்லூரும் ஒன்றே வென்பதும் தீர்க்கப்படாத சிக்கல்கள். தமிழரசர்களால் நல்லூரிற் தாபிக்கப்பட்ட தமிழ்ச்சங்கத்தில் இரகுவம்சம் முதலிய இலக்கிய நூல்களும் பரராசசேகரம், செகராசசேகரம், செகராசசேகரமாலை, முதலிய மருத்துவ சோதிட நூல்களும் இயற்றப்பட்டன. பரராசசேகரன், செகராசசேகரன் என்பவை யாழ்ப்பாண அரசர்கள் மாறி மாறிப்புனைந்து கொண்டபட்டப் பெயர்கள்.

யாழ்ப்பாண அரசர்காலத்தில் நல்லூரின் அமைப்பைப் பற்றி யாழ்ப்பாண வைபவமாலை பின்வருங் குறிப்பைக் கூறுகின்றது.

"நாலுமதிலும் எழுப்பி வாசலும் ஒழுங்காய் விடுவித்து மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் பூங்காவும் பூங்காவன நடுவிலே ஸ்நான மண்டபமும் மூப்புடைக் கூபமும் உண்டாக்கி அக்கூபத்தில் யமுனநதித் தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்துவிட்டு நீதிமண்டபம், யானைப்பந்தி, குதிரைப்பந்தி சேனுவீரரிருப்பிடம் முதலிய அனைத்தும் கட்டுவித்து......... கீழ்த்திசைக்குப் பாதுகாப்பாக வெயிலுவந்த பிள்ளையார் கோயிலையும் மேற்றிசைக்கு வீரமாகாளியம்மன் கோவிலையும் வடதிசைக்குச் சட்டநாதேஸ்வரர் கோவில், தையல்நாயகியம்மன் கோவில், சாலைவிநாயகர் கோவிலையுங் கட்டுவித்து...... வாழ்ந்திருந்தான்."

1548 இல் போர்த்துக்கீசர் யாழ்ப்பாண இராச்சிய விவகாரங்களில் தலையீடத் தொடங்கினர்கள்; 1548 இலும் 1560 இலும் 1591 இலும் 1618 இலும் அவர்களது படையெடுப்புகள் நடைபெற்றன. 1591 இல் பறங்கித் தளபதி பேற்ராடோ நல்லூரில்

மகாநாடொன்றைக் கூட்டுவித்து போர்த்துக்கீச மேலாணையை ஏற்றுக் கொள்ளச் செய்தான். 1618 இல் யாழ்ப்பாண அரசு முற்றாகப் போர்த்துக்கீசர் கைக்கு வந்தது. நல்லூரில் இருந்த கோயில்கள் இடிக்கப்பட்டன. கோவிற் கற்களைக் கொண்டு கோட்டைகளும் தேவாலயங்களும் வீடுகளும் கட்டப்பட்டன;

இப்படியே காலயுத்தி ஷ ஆனி மீ யாழ்ப்பாணம் பறங்கியர சாட்சிக்குள்ளாயிற்று. பறங்கிகள் அரசாட்சியை ஒப்புக் கொண்டு, நல்லூரிற்றானே இருந்து கொண்டு தங்கள் கருமங்களை நடத்திப் பிறக்கோட்டை மதில்களை இடிப்பித்து அக்கற்களைக் கொண்டு போய்க் கடலோரத்திலே சங்கிலியிராசன் இடித்துப் பரவிவிட்ட தங்கள் கோட்டையை மறுபடி கற்கோட்டையாகக் கட்டி அதன் கீழ்ப்புறத்திலே வீடுகளையும், அரசாட்சி மண்டபங்களையும், கட்டு வித்துக் குடிகள் சமீபத்தில் வீடுகட்டி வந்திருக்கும் படி வசதியும் பண்ணினார்கள்''

— யாழ்ப்பாண வைபவ மாலை

வைபவ மாலையின் இக்கூற்றுக்குச் சான்று பகருவது போன்று யாழ்ப்பாணம் கோட்டைக்குள் தாமரைப் பூப் பொறித்த கற்களும் தூண்களும் காணப்படுகின்றன. சமீபத்தில் கோட்டைக்குள் நல்லூரில் உள்ள கோயில் ஒன்றுக்குச் சொந்தமான 1ம் ராஜேந்திரன் காலத்துக் கல்வெட்டொன்று[1] கண்டு பிடிக்கப்பட்டதும் குறிப் பிடத்தக்கது. யாழ்ப்பாணம் பிரதான வீதியிலும் குறுக்கு வீதிகளிலுமுள்ள பல வீடுகள் பழமையான கற்களால் கட்டப்பட்டிருப் பதை அவதானிக்கலாம். இவற்றுள் பெரும்பாலனவை பழைய தமிழ் இராசதானியை இடித்துக் கொணரப்பட்ட கற்கள் என்பதில் ஐயமில்லை. யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அரும் பொருளகத்திற்கு முன்பாக உள்ள தேநீர்க்கடை யொன்றின் வாயிற்படியாக கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட கல்லொன்று நெடுங் காலமாக உபயோகப்படுத்தப் பட்டிருந்தது. இது ஆறும் பராக் கிரமபாகு காலத்ததாகும். நல்லூரிலிருந்து பெறப்பட்டிருக்கலாம். கல்வெட்டின் வாசகம் வருமாறு.

ஸ்ரீசங்க பொதிவ(ர்) மரான தி(ரு)புவ(நச்) சக்க(ற) வத்தி க(ள்) சிறிபராக்கிறமபாகு தெவ(ற்கு) யாண்டு...... (ஆ) வது(க்) (குள) தி (ராவது)...''

---

[1] இது யாழ் தொல்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ளது.


நல்லூரிலுள்ள சில இடி பாடுகள் கூறுங் கதையை இனிக் கேட்போம்.

### சங்கிலித் தோப்பு

### மந்திரிமனை.

பருத்தித்துறை வீதியில் சட்டநாதர் கோவிலுக்கு அண்மையில் கம்பீரமான முகப்புக் கோபுரத்துடன் ஒரு அரண்மனை இருக்கிறது. (இதனை மந்திரிமனை என்கிறார்கள்) இது தற்பொழுது சட்டநாதர் கோவில் அர்ச்சகரின் இல்லம்.

கோபுரம் நூதனமான கலை அமைப்பு உடையது. அரண்மனையின் பல பகுதிகள் பிற்காலத்ததாக இருப்பதால் இது ஒல்லாந்த சுதேச கட்டிடக் கலையின் கலப்பாக இருக்கலாம். உள்ளே வெண்ணிறமரத்தில் போதிகைகள் புதுமையான வடிவில் செதுக்கப்பட்டுள்ளன. வீட்டினுள்ளே பல பகுதிகள் திருத்தப் பட்டு விட்டன. ஒருபுறத்தில் பழமையான கிணறொன்று பாதி வீட்டினுள்ளேயும்



மேலிருந்து கீழ்

1. சங்கிலித்தோப்பு தலை வாசல்
2. மந்திரிமனையின் பின் புறம் (சுரங்கம் உள்ள பகுதி)
3. யமுனா ஏரி,

பாதி வெளியேயுமாக இருக்கின்றது. இக்கிணற்றுக்கும் யமுனு ஏரிக்கும் சுரங்கத் தொடர்பு இருந்ததாகவும் இதனுல் நீர் பெருகி இறைக்கமுடியாமல் இருந்ததால் அதனைக் கற்களைக் குவித்து மூடிவிட்டதாகவும் கூறினர்கள்.

வீட்டின் பின்புறத்தில் சில பகுதிகள் யாழ்ப்பாண அரசர் காலத்தது எனக்கருத இடமுண்டு. மூன்று ஆண்டுகளுக்கு முன் வீட்டின் பின்புறத்தில் நிலஅறையொன்றையும் அதற்கு மேல் வளைவான மூடு சாந்துக் கூரையுடைய மண்டபமொன்றையும் பார்த்த நினைவு எனக்குண்டு. சமீபத்தில் அம்மண்டபம் இடிந்து விழுந்தோ அல்லது இடித்து விழுத்தப்பட்டோ நிலஅறை இருந்த சுவடே தெரியாது மூடப்பட்டுவிட்டது. அந்நிலஅறை, பொழியப்பட்ட வெள்ளைக் கற்களால் கட்டப்பட்டிருந்தது. இந்த இடத்திலிருந்து வீட்டிற்குள் செல்லும் வாசல் ஒன்று சீமெந்து இட்டு அடைக்கப்பட்டுவிட்ட அடையாளம் காணப்படுகின்றது. வீட்டிற்குள்ளும் ஒரு நிலஅறை இருந்ததாகவும், இறங்கிச் செல்ல மரப்படிகள் இருந்ததாகவும், அதுவும் சிலவருடங்களுக்கு முன் அடைக்கப்பட்டு விட்டதாகவும் முதியவர்கள் சிலர் கூறினர்கள்.

பின்புற வாயிலின் பெரும் இரும்புக் கதவொன்று மிகப் பெரிய பூட்டுடன் காணப்படுகின்றது. ஆனுல் பூட்டின் நாக்கும் திறப்புத் துவாரமும் சிறியன. இந்தப் புறத்தில் எஞ்சியுள்ள பகுதிகளும் எந்த நேரத்திலும் இடியும் நிலையில் உள்ளன;

## யமுனு ஏரி

சங்கிலித் தோப்பில் இருந்து யமுனு ஏரிக்குச் செல்லும் வழியில் தெருவோரமாக அரண்மனையின் தலைவாசலைக் காணலாம். இதில் பழமையான சாயல்கள் காணப்படினும் இதுவும் பிற்காலத்தது என்று கூறுவாருளர்.

யமுனு ஏரியைச் சூழ்ந்து வயல்கள் இருப்பதால் ஏரியை இலகுவில் அணுக இயலாது. இது ஒரு 'ப' வடிவமான கேணி. யமுனையில் இருந்து நீர் கொண்டுவரப்பட்டு இதில் கலக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது. இறைக்க இறைக்க வற்ருது என்று கூறுவார்கள். ஆனுல் தற்பொழுது சேறு நிரம்பியதால் ஊற்றுக்கண் வற்றி வரண்டு போயிருக்கிறது. சுற்றுடலில் உள்ள தோட்டங்கள் இக் கேணியையே நம்பியுள்ளன;

கேணி முழுவதும் பழமையான முருகைக் கற்களாலும் வெள்ளைக் கற்களாலும் கட்டப்பட்டுள்ளது. கேணியைச் சுற்றி மண்டபங்கள் இருந்தமைக்கான தடயங்கள் உண்டு. செங்கட்டிகள் வெள்ளைக் கற்கள் என்பன சிதறிக் காணப்படுகின்றன; சுண்ணும்புச்

சாந்திஞலான வேலைப்பாடுள்ள தூண்பகுதிகள் சிலவும் கவனிப்பா ரற்றுக் காணப்படுகின்றன. கேணிக்குள் இறங்கிச் செல்ல ஒடுக்க மான படிக்கட்டுகள் உண்டு.

ஏரியைப்பற்றிப் பல கதைகள் கூறப்படுகின்றன. யாழ்ப்பாண அரசர்கள் ஆபத்துக் காலங்களில் தமது சொத்துக்களை இதனுள் போட்டுவிட்டு ஒடியதாகக் கருதுகின்றார்கள்[2] யமுன ஏரியோடு தொடர்புடைய சுரங்கங்கள் பொறிகள் இருந்ததாகவும் கூறப்படு கின்றது.

எது எப்படியாயினும் இக்கேணி புதுமையான அமைப்புடை யது. பொறியியல் நுட்பங்கள் வாய்ந்தது. இயற்கை அரண்கள் இல்லாத யாழ்ப்பாணத்தில் அரசர்கள் பாதுகாப்பிற்காக சுரங்கங் களையும் யந்திரப் பொறிகளையும் நம்பியதில் வியப்பில்லை.

## பூதவராயர் கோயில்

நல்லூர் சட்டநாதர் வீதியாற் சென்று அரச வீதிக்கு எதி ராக உள்ள மண்தெருவில் திரும்பினல் பூதவராயர் கோயிலை அடையலாம். கோவிலுக்கு அருகில் பாழடைந்த குளமொன்றும் உண்டு.

முதலாம் சங்கிலி அரசன் காலத்தில் கோட்டையரசன் தர்ம பாலனின் தகப்பனுகிய விதியபண்டாரன் போர்த்துக்கீசருக்குப் பயந்து கோட்டையின் சொத்துக்களோடு சங்கிலியனிடம் அடைக் கலமாக இருந்து வருகையில் வெடி விபத்தொன்றில் விதியபண் டாரன் இறக்க அவனுக்காகச் சங்கிலியரசன் கட்டிய கோயில் இது என சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். (திரு, C. S. நவரத்தினம் இக் கருத்தைக் கூறியுள்ளார்.)

தற்பொழுது இக் கோயிலில் பழமையான பகுதிகள் அதிகம் இல்லை. ஒரே ஒரு பக்கம் மாத்திரம் சற்றுப் பழமையாகக் காணப் படுகின்றது. மூலமூர்த்தியும் முருகனுக மாறிவிட்டது. கோயிலோடு தொடர்புடைய மூதாட்டியொருவர் இக்கோயில் சம்பந்தமான பழங்கதைகள் சிலவற்றைக் கூறினர். அவரது இல்லத்தில் ஏராள மான ஏட்டுச் சுவடிகள் இருப்பதாகவும் கூறினர். நான் கோயி லுக்குச் சென்ற பொழுதே மூலத்தானத்திற்கு முன் கந்தபுராண ஏட்டுச் சுவடி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டேன்.

---

[2] இரும்புப் பானையொன்றின் துண்டங்கள் ஏரியோடு ஒட்டிய வயலில் இருந்து பெறப்பட்டு பாலேந்திரன் என்பவரால் எனக் குக் கொடுக்கப்பட்டது.

## பண்டாரக் குளம்

யாழ்ப்பாணத்து மொழி வழக்கில் பண்டாரம் என்றால் அரசன் என்பது பொருள். யாழ்ப்பாண அரசர்கள், இளவரசர்கள் சிலர், தங்கள் பெயருடன் பண்டாரம் என்ற பெயரையும் சேர்த்துக் கொண்டார்கள். பண்டாரக்குளம் என்றால் அரசனுடைய குளம் என்பது பொருள். மேலும் இது அரச வீதி, பூதவராயர் கோயில், இவற்றிற்கு அண்மையில் இருப்பதும் இதன் முக்கியத்துவத்தை உணர்த்தும். ஒல்லாந்தர் காலத்தில் பண்டாரக் குளத்தை அடுத்த வயல்கள் சின்னத்தம்பிப் புலவருக்குச் சாசனம் செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வீரமாகாளி அம்மன் கோவில்

இது சிங்கையாரியன் என்ற அரசனால் நல்லூரின் மேற்றிசைக் குக் காவலாகக் கட்டப்பட்டது என்று வைபவமாலை கூறுகின்றது. இதுபுராதன நகரின் எல்லைக்கு அண்மையில் இருந்ததால் (வண்ணார் பண்ணை) நல்லூருக்குள் நுழைய முயன்ற அந்நிய ருடன் நடைபெற்ற போர்கள் இப்பகுதியிலேயே நிகழ்ந்தன.

''யுத்தம் நடப்பிப்பதற்கு நல்லூர்க் கோட்டையில் மேற்கு வாசற் புறத்தே வீரமாகாளியம்மன் கோவிலுக்கு முன்னாகவிருந்த வெளியையே இடமாக நியமித்துக் குறித்த நாளிலே யுத்தத்தை ஆரம்பித்துப் பதினொரு நாளாக நடத்தினார்கள். பறங்கிகள் துப் பாக்கிச் சூத்திரத்தைக் கையிற் கொண்டு அணியணியாய் நின் றார்கள் தமிழர் வாள் முதலிய படைக்கலங்களைக் கொண்டு நின்றார்கள்.''

— வைபவமாலை

குவிறோஸ் பாதிரியாருடைய கூற்றும் இதனை உறுதிப்படுத்து கின்றது. வீரமாகாளி யாழ்ப்பாண அரசருடைய போர்த் தெய்வ மாக விளங்கினாள். புராதன ஆலயம் போர்த்துக்கீசரால் இடிக்கப் பட்டு விட்டது.

## சட்டைநாதர் கோவில்

சட்டைநாதர் என்பது சிவனுடைய பைரவ மூர்த்தங்களுள் ஒன்று. இரணியனைக் கொன்றதால் தருக்கித் திரிந்த நரசிங்கத்தை அடக்கி அதன் எலும்பைக் கதையாகவும் தோலைச் சட்டையாகவும் தரித்தவரே சட்டைநாதர்.

இவ் ஆலயமும் வீரமாகாளி அம்மன் கோவிற் காலத்தது. சட்டைநாதராலயமும் போர்த்துக்கீசரால் இடிக்கப்பட்டதாயினும் மணிக்கூட்டுக் கோபுரத்தின் கீழ்ப் பகுதியும் வளைவான மூடுசாந் திட்ட மடைப்பள்ளியும், கேணியும், பழமையைக் காட்டுகின் றன. மந்திரிமனை அருகிலிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ் ஆலயத்தில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட விநாயகர், தெட் சணாமூர்த்தி, வள்ளி தெய்வயானை சமேத முருகன், கஜலெக்குமி முதலிய சிலைகள் யாழ். தொல்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

கைலாயநாதர் கோவில், வெயிலுகந்த விநாயகர் கோவில், கைலாசப்பிள்ளையார்கோவில் என்பனவும் நல்லூரில் இருந்த ஏனைய புராதன ஆலயங்களாம்.

## நல்லூர்க் கந்தசுவாமி கோவில்

இதைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியிருந்ததால் இறுதியாக எடுத்துக்கொண்டேன். நல்லூர்க் கந்தசுவாமி கோவிலைக் கட்டியவர் யார் என்பது சிக்கலான கேள்வி. கோவிலின் கட்டியம் புவனேகபாகு என்ற பெயரைக் குறிப்பிடுகின்றது. வைபவமாலை புவனேகபாகு என்ற மந்திரியைக் குறிப்பிடுகின்றது.

புவனேகபாகு என்ற பெயருடன் இலங்கையை ஆண்ட அரசர்களுள் ஆறும் புவனேபாகு என்ற செண்பகப் பெருமாளே (15ம் நூ.) யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் செலுத்தியவன். ஆனால் 6ம் புவனேகபாகுவிற்கு முன்பே கந்தசுவாமி கோவில் இருந்திருக்கலாம் என்பதற்குச் சில சான்றுகள் உண்டு.

யாழ். கோட்டைக்குள் கண்டெடுக்கப்பட்ட ராஜேந்திர சோழன் காலக் கல்வெட்டு நல்லூர்க் கோயிலொன்றைக் குறிப்பிடுகின்றது. இது கந்தசுவாமி கோவிலாகலாம். எனவே நல்லூர்க் கோவிலின் காலம் மாவிட்டபுரத்திற்குச் சமமாகச் செல்கின்றது. பழம்பாடல் ஒன்றின்படி இது சகாப்தம் 870 இல் (கி. பி. 948) கட்டப்பட்டதாகத் தெரிகிறது. மேலும் ''யாழ்ப்பாணயன் பட்டின மருவிய பெருமாளே'' என்ற அருணகிரிநாதர் திருப்புகழும் இக் கோவிலைப் புவனேகபாகுவிற்கு முன் கொண்டு செல்கின்றது.

தற்பொழுதுள்ள நல்லூர்க் கோவில் சரியான இடத்தில் அமைந்திருக்கின்றதா என்பது அடுத்த கேள்வி. பழைய நல்லூர்க் கந்தன் கோவில் தற்போதைய முத்திரைச்சந்தை தேவாலயம் அமைந்துள்ள இடத்தில் இருந்ததாகவே பலரும் கருதுகின்றார்கள். இப்பகுதியில் தோண்டினால் பழைய அத்திவாரம் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தர் காலத்தில் டொன்யுவான் இரகுநாத மாப்பாண முதலியார் என்பவர் தற்போது கோவில் இருக்கும் இடத்தில் ஒரு சிறு வேலாயுதத்தைத் தாபித்தார். இது நாளடைவில் பழைய கந்தசுவாமிகோவிலின் பெயரைப்பெற்று வளர்ந்துவிட்டது.

நல்லூர்க் கந்தன் ஆலயம் இருக்கும் இடத்தில் பிற்காலத்தில் முஸ்லீம்களின் குடியிருப்பு இருந்ததாகவும் பின்னர் அவர்களைக் கலைப்பதற்காகச் சைவர்கள் பன்றி இறைச்சியை கிணறுகளில் போட்டுவிட முஸ்லீம்கள் நல்லூரைவிட்டு நாவாந்துறைக்கு அண்மையில் (சோனக தெரு) குடியேறியதாகவும் வைபவமாலை கூறுகின்றது. நல்லூர்க்கோவிலினுள்ளே முஸ்லீம் சமாதி ஒன்று இருப்பதாகக் கூறப்படுவதும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

## நாவலரும் நல்லூரும்

நாவலர் காலத்தில் நல்லூர்க் கோவில் நிர்வாகத்தில் இருந்த ஊழல்கள், ஆடு வெட்டுதல், விலைமாதர் நடனம், ஆகமவிரோத மான அமைப்பு, போன்ற சமயச் சீர்கேடுகளுக்கு எதிராக நாவலர் எழுதிய இரு கண்டனங்கள் பிரசித்தமானவை.

மூலத்தானத்தில் வேல் இருப்பது, அதன் அருகில் வள்ளி தெய்வயானை இருப்பது, உற்சவ விக்கிரகம் வேலாக இருத்தல், தூபி இல்லாமை முதலிய, ஆகம விரோதங்களைப்பற்றி நாவலரவர் களே கண்டனங்களில் தெளிவுபடுத்தியுள்ளார். அவரது காலத்தில் அவர் இதனைத் திருத்த எடுத்த முயற்சிகள் பயனற்றுப் போயின: இதனால் சுமார் 30 வருடகாலம் நாவலர் நல்லூர்க் கந்த சுவாமி கோவிலில் மிதிப்பதையே தவிர்த்துவிட்டார்.

## தொல்பொருட்களுக்கு ஆபத்து

நல்லூரிலும் அதன் சுற்றாடலிலும் உள்ள தொல்பொருட்கள் கவனிப்பாரின்மையாலும் பொதுமக்களது அறிவின்மையாலும் பாழடைந்துகொண்டு செல்கின்றன. மந்திரி மனையிலுள்ள சுரங் கம் மூடப்பட்டுவிட்டது. எஞ்சியவையும் இடிந்துவிழக் காத்து நிற்கின்றன. மனை நவீனமாகிக்கொண்டு செல்கின்றது.

யமுனா ஏரியும் அதனைச் சூழ்ந்த வயல்களும் வண்ணைச் சிவன் கோவிலுக்குச் சொந்தமானவை. சில வயல்கள் விற்கப்பட்டுவிட் டன. ஏனையவை குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இதனால் ஏரிக்குச் செல்லும் வழிகள் அடைக்கப்பட்டுவிட்டன. ஏரிக்கு மிக அண்மையில் பயிர் செய்யப்படுவதால் பழமையான அதன் கட்டிடங்கள் பாதிக் கப்படலாம். அங்கு காணப்படும் தொல் பொருட்கள் அறிவீனத் தால் அலட்சியப்படுத்தப்படுகின்றன.

சமீபத்தில் நல்லூரில் வங்கி ஒன்று கட்டுவதற்காக அத்திவா ரம் வெட்டியபொழுது பழைய அத்திவாரம் முதலியவை காணப் பட்டதாகவும் அது அலட்சியப்படுத்தப்பட்டு அதன்மேல் புதுக் கட்டிடம் கட்டப்பட்டுவிட்டதாகவும் கூறுகின்றார்கள். அரசடி வீதி யோரம் மின்சார இணைபபு புதைப்பதற்காக தோண்டிய பொழுது பழைய செங்கட்டிகள் வெளிப்பட்டதை நான் நேரில் கண்டேன்.

வெகுவிரைவில் இவ் இடங்கள் தொல்பொருட் பகுதியால் பொறுப்பேற்கப்படாவிடின் தொல்பொருட்கள் அநியாயமாகஅழிந்து போகும் நிலையேற்படலாம். இவற்றைப் பாதுகாப்பதுஅரசின் கடன்.

[ மேற்படி இடங்களைப் பார்வையிடவும், நிழற் படமெடுக்கவும் உதவிய நண்பர் க. சிவகுமாருக்கு எனது நன்றி. ]

# பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை வாழ்க்கையும் பணியும்

ஆ. சிவநேசச்செல்வன் பி. ஏ. [ஆனர்ஸ்]
தமிழ் விரிவுரையாளர்,
யாழ்ப்பாணக் கல்லூரி

மரபு வழிவந்த தமிழ்க் கல்வியும், மேலைப்புலக் கோட்பாடுகளுக் கமைந்த தமிழியற் பயிற்சியும் பெற்று இருபத்தொன்பது ஆண்டுகள் இலங்கைப் பல்கலைக் கழகத்திலே செயலூக்கத்தோடு பணியாற்றியவர் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள். இந்த நூற்றாண்டில் படிமுறையாக எமது நாட்டில் வளர்ந்து வந்த இலக்கிய விழிப்புணர்ச்சியோடும் தேசிய எழுச்சியோடும் இரண்டறக் கலந்து கொண்ட பேராசிரியர் ஆராய்ச்சிப் பேரறிஞராகவும் அதேநேரம் ஆக்க இலக்கிய கர்த்தாவாகவும் விளங்கினார். நெறிமுறைக்குட்பட்ட கல்வியும் புகழ் பூத்த பல கல்வியாளர்களுடைய தொடர்புகளும் பேராசிரியருடைய பணிகளில் ஒருவகை நிதானத்தையும் நோக்கையும் இனங்காண வைக்கின்றன. ஈழத்தின் கலை இலக்கிய வாழ்க்கையோடு தம்மைப் பின்னிப் பிணைத்துப் பல்கலைக்கழகத்திலும் வெளியுலகத்திலும் சமுதாயத்தின் போக்கைத் திசைதிருப்பும் வகையிலும் எதிர்காலத்தை உணர்த்தும் வகையிலும் செயலாற்றியவர் பேராசிரியர். சமூக முரண்பாடுகளும் தேசிய முரண்பாடுகளும் வளர்ந்து வந்த நிலையில் நாட்டின் இனமொழி கலாச்சாரப் பண்புகளைத் தொகுத்து நோக்கியும், உணர்த்தியும், மறுமதிப்பீடு செய்தும் பல்துறையார்வத்தோடு செயலாற்றிய பேராசிரியரது வாழ்க்கையையும் பணிகளையும் மறுமதிப்பீடு செய்வது இன்றியமையாததாகும்.

குறிப்பாக விடுதலைக்குப் பின்னர் எமது நாட்டில் ஏற்பட்ட தேசிய விழிப்புணர்ச்சி கலை இலக்கியத் துறைகளில் வேகமான வளர்ச்சியையும், சமுதாயப் போக்கிற் பல்துறை முன்னேற்றங்களையும் உருவாக்கியது. நாட்டு மக்கள் அன்னிய மோகத்தினின்றும் விடுபட்டுத் தன்னுணர்வுடனும் தேசிய நோக்குடனும் செயலாற்றினர். மொழி, இனம், தேசியம் பற்றிய உணர்வுகள் மக்களுள்ளங்களிலே தீவிர சிந்தனைகளை வளர்த்து வந்தன. போராட்டத்தின் அடிப்படையில் கிடைக்காத எமது நாட்டுச் சுதந்திரம் பாரத

நாட்டில் ஏற்பட்டது போன்ற மாபெரும் மகிழ்ச்சி அலையை ஏற்படுத்தவில்லை. வகுப்புவாத உணர்வுகளும் குறுகிய சிந்தனைகளும் சிறிய பல்லின நாட்டிற்கேயுரிய அளவில் வளர்ந்து வந்தன. முன்னணியில் இயங்கிய கல்வி வல்ல உயர்ந்தோர் குழாமும் [Eiltes] அவர்களைச் சார்ந்த மத்தியதர வர்க்கத்தினரும் போலி நாகரிகப் பிடியிலிருந்து விடுபடாது மனமயக்கத்துடனும் விதேசப் போக்குடனும் இயங்கினர். கலைகலாச்சாரம், மொழி, பண்பாடு, பற்றிப் பரவலாகப் பேசப்பட்டதாயினும் அவை தேசத்தின் உள்ளுணர்வுப் பிரதிபலிப்பின் வெளிப்படை என்ற நிலை ஏற்படவில்லை. எனினும் வெறும் உதட்டளவு உணர்வு என்ற நிலைக்குப் புறம்பாக இதய பூர்வமாகவும் ஆத்மார்த்தமாகவும் தமது பணிகளையும் எழுத்துக்களையும் அமைத்தவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். இவர்களை வகைப்படுத்தி இனங்காண முயற்சிக்கும் போது பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையை நாம் நிச்சயமாகத் தவறவிடமுடியாது.

சுவாமி விபுலானந்தரினதும் பேராசிரியர் பிரான்சிஸ் கிங்ஸ்பரியினதும் நன்மாணாக்கராக விளங்கிய பேராசிரியர் கணபதிப்பிள்ளை தமது முதல் நிலைப்பட்டத்திற்குச் சங்கத மொழியையும், பாளி மொழியையும் பயின்றார். பின்னர் சுவாமிகளின் அனுசரணையுடன் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்றார். இக்காலத்திலே பொன்னோதுவார் மூர்த்திகள், சர்க்கரை இராமசாமிப்புலவர், அரசன் சண்முகனாரின் மாணவரான கந்தசாமியார் ஆகியோரிடம் தமிழ்ப்பயிற்சி பெற்றார். பின்னர் மேலைப்புல ஆராய்ச்சி ஆர்வத்துடன் கலாநிதிப் பட்டம் பெற இலண்டன் பல்கலைக்கழகக் கீழைநாட்டுக் கல்லூரியிற் சேர்ந்தார். குறிப்பாக பேராசிரியர் ரால்ப் ரேணர், பேராசிரியர் பெயிலி, டாக்டர் பாணற்று, பேராசிரியர் புளொக், ஆகியோரின் சிந்தனைப் பின்னணியில் தமது ஆளுமையை வளர்த்துக் கொண்டார். திராவிட மொழியியல் ஆராய்ச்சியில் பலருக்கு வழிகாட்டியாக அமையும் சாசனவியல் ஆராய்ச்சி, திராவிட மொழியியல் வல்லுனராகப் பேராசிரியர் கணபதிப்பிள்ளையை அறிமுகப்படுத்திற்று.

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் வளர்ச்சியிலும் வாழ்விலும் காலந்தோறும் பல் துறை ஆர்வங்களை ஊட்டி நெறிமுறையான தமிழாராய்ச்சி வல்லுனர்களை உருவாக்கினர்; சுவாமி விபுலானந்தர் பேராசிரியராக இருந்த காலத்திலும் பின்னரும் தமிழ்த் துறையை வழிப்படுத்தியவர் பேராசிரியர் அவர்களேயாவர். ஈழத்து எழுத்தாளர்களின் மரபுவழி இலக்கியங்களையும் ஆக்க

இலக்கியங்களையும் பாடவிதானத்துள் இணைத்து இலக்கியக் கல்வியை விரிவுபடுத்தினர். ஈழத்து இலக்கியங்களைப் பல்கலைக் கழக மட்டத்தில் அறிமுகப்படுத்தியது மட்டுமன்றி ஆக்க இலக்கிய கர்த்தாக்களை உருவாக்கும் உந்துசக்தியாகவும் விளங்கினர். தாமே ஆக்க இலக்கிய கர்த்தாவாகவும் வழிகாட்டியாகவும் விளங்கினர்.

பேராசிரியரின் பணிகள் பன்முகப்பட்டவை. மொழியியல், சாசன வியல், கட்டுரையியல், நாடகவியல் ஆகிய துறைகளை வளம் படுத்திய பேராசிரியர் ஆக்க விலக்கியத்துறையில் ஆர்வம் கொண்டு காலத்தின் ஈர்ப்புக்குட்பட்டுச் செயலாற்றினர். பேராசிரியரின் மொழியியல் அறிவும் சாசனவியல் ஆராய்ச்சியும் வழிவந்த சிந் தனைகளை அவரது கட்டுரைகளிலும் நாடகங்களிலும் நாவல்களிலும் கவிதைகளிலும் காணமுடிகின்றது. தமது எல்லா ஆக்கங்களிலும் வழக்குத் தமிழிற்கு அழுத்தம் கொடுத்த பேராசிரியரது பணியை நன்கு மதித்த சுவாமி விபுலானந்தர், சோழமண்டலத் தமிழும் ஈழமண்டலத்தமிழும் என்ற கட்டுரையிலே நன்கு பாராட்டியுள் ளார். சாசனங்கள் பேச்சுத்தமிழ் வழக்கின் பதிவேடாக அமை கின்றது என்பதைத் தமது முகவுரைகளில் அழுத்தியுரைத்துள் ளார். வழக்கு மொழியாய்வு ஆர்வத்தை ஈழத்தில் வளர்த்தவர் பேராசிரியர் என்ருல் அது மிகையாகாது,

பல்வேறு தேவை நோக்கிப் பல்வேறு காலங்களிலும் பேராசிரி யர் எழுதிய கட்டுரைகள் பல இன்னும் நூலுருப் பெறவில்லை. ஈழத்து வாழ்வும் வளமும் என்ற கட்டுரைத் தொகுதி பேராசிரி யரின் கட்டுரை வன்மையைத் தெளிய வைக்கப் போதுமானதாகும். யாழ்ப்பாண வாழ்வில் ஊறித் திளைத்த பேராசிரியர் ஈழத்து வாழ்வின் பேரிரசிகனுகவும், சிறப்பாக யாழ்ப்பாண வாழ்வின் பேரபிமானியாகவும் விளங்கி ஈழத்து வாழ்வையும் வளத்தையும் நாட்டவர்க்கும் பிறநாட்டவர்க்கும் உணர்த்தும் வகையில் இயங்கி யமையைத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

பூஞ்சோலை, வாழ்க்கையின் விநோதங்கள், நீரரமகளிர் போன்ற ஆக்கங்களிற் பேராசிரியர் படைத்துள்ள குணசித்திர பாத்திரங் களும் பிறவும் அவரது மனிதாபிமான உணர்வையும் புனைகதை இலக்கிய வன்மையையும் காட்டுவன. நாவலில் மனிதனைவிட மனித உள்ளத்துக்கே இறப்பு உண்டு என்பதைக் குணசித்திரப் பண்புகளோடு வாழ்க்கையின் விநோதங்கள் என்ற நாவலில் வெளி யிட்டுள்ளார். வாழ்க்கை என்னும் ஆற்றுப் போக்கில் அகப்பட்டுப்

போராடும் மனிதர்களை இனங்கண்டுள்ளேன் எனப் பேராசிரியரே முகவுரையிற் கூறியுள்ளது மனங்கொள்ளத்தக்கது.

ஈழத்துக் கவிதை இலக்கிய வரலாற்றிலே பேராசிரியர் கணபதிப் பிள்ளைக்குக் குறிப்பிடக் கூடிய இடம் உண்டு. ஈழத்துக் குழூஉ இறையனார் என்ற புனைபெயரில் பல்வேறு சஞ்சிகைகளிலும், பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க ஏடாகிய இளங்கதிரிலும் பல கவி தைகளை எழுதியுள்ளார். மரபு வழிவந்த யாப்பு வடிவங்களைப் பயன்படுத்தி நமது வாழ்க்கை நமது நாடு ஆகியவற்றையே உரிப் பொருளாகவும், கருப்பொருளாகவும் கொண்டு அமைந்தவை பேராசிரியரின் கவிதைகள். தனிப்பாடல்களாகவும், பதிகங்களா கவும் மொழி பெயர்ப்புக்களாகவும், உரையிடையிட்ட பாட்டுக் களாகவும் நூற்றுக் கணக்காகப் பாடியுள்ளார். ''தீவெட்டிக் கள்ளர்'', விந்தை முதியோன், ''சீதனக் காதை'' ''பாணர் புரவலன்'' ஆகிய நான்கு கதைப் பாடல்களைக் கொண்ட 'தூவுதும் மலரே' என்ற நூல் மேலும் ஒரு படி பேராசிரியரின் சமூக உணர்வினை அழுத்தி உரைப்பதாகும். தனது இளமைக் கால வாழ்க்கையின் பசுமையான நினைவுகளை உயரிய இலக்கியங்களாக பதிவு செய்துள்ளமையைக் காணலாம். ஈழத்து மக்கள் வாழ்க் கையை அனுதாபத்துடனும் மனிதாபிமானத்துடனும் நோக்கிய பேராசிரியர் தமது கவிதை நோக்கினைப் பின்வருமாறு முகவுரையில் கூறியுள்ளார்;

> ''........ நானும் சமுதாயத்திற் காணும் உயரிய பண்பு களை மட்டுமன்றித் தாழ்ந்த நிலைகளையும் இன்பதுன்பங்களை யும் பாட்டிற் தீட்டிக் காட்டுவதில் உளநிறைவு கண்டேன். பாட்டின் மூலம் சிரிக்கலாம்; பாட்டின் மூலம் அழலாம். சிரிப் பதிலும் பார்க்க அழுதலே கூடிய சுவையைக் கொடுக்கும். என் வாழ்வில் நகையும் அழுகையும் அதிகமாய் எழுந்த காலங்களிற் தீட்டி வைத்தவையே இப்பாடல்கள்''

மேற்போந்த பேராசிரியரின் கூற்று இலக்கியங்களைச் சமூகத் திலும் வாழ்க்கையிலும் இருந்து முகந்த தன்மையைக் காட்டுகின் றது. ஓசையும் உணர்ச்சிச் செறிவும் மட்டும்தான் கவிதையல்ல பொருட் செறிவே கவிதையின் உயிர் என்பது பேராசிரியரின் கொள்கையாகும். பேராசிரியரின் காதலியாற்றுப்படை பழமையை யும் புதுமையையும் இணைத்துக் காட்டுகின்றது. மரபு வழிவந்த வழக்கிறந்த இலக்கிய வடிவத்தைப் பயன் படுத்தி வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் பேராசிரியரையே இங்கு காண்கின்றோம்.

சென்ற நூற்றுண்டிலே நாடக உலகிற்கொரு பேராசிரியராகச் சுந்தரம்பிள்ளை விளங்கியது போல இருபதாம் நூற்றுண்டில் நாட

கத் தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவர் பேராசிரியர் கணபதிப் பிள்ளை எனலாம். நாடகங்களின் மூலம் பரவலான தாக்கத்தை ஏற்படுத்த விரும்பிய பேராசிரியர் எழுதிய நான்கு நாடக நூல் கள், வெளிவந்துள்ளன. நானாடகம், இரு நாடகம் ஆகிய தொகுதி களில் ஆறு சமூக நாடகங்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. சங்கிலி வரலாற்று நாடகமாகும். மாணிக்க மாலை மொழி பெயர்ப்பு நாடகமாகும் நானாடகமும் இருநாடகமும் முழுமையாக ஈழத்துப் பேச்சுத் தமிழிலும், மாணிக்க மாலை செந்தமிழ் நடையிலும் சங்கிலி செந்தமிழ் வடிவிலமைந்த பேச்சுத்தமிழிலும் எழுதப் பட்டுள்ளன. சமூகத்திற் பல்வேறு தரத்திலும் வாழ்வோர்களுடைய பிரச்சினைகளை நுணுகி நோக்கிய பேராசிரியர் அவற்றைத் தமது நாடகங்களிற் பிரதிபலித்துச் சீர்திருத்த விளைந்தார். மத்திய தர வர்க்கத்தின் திரிசங்கு மனோநிலையை நாசுக்காகக் கண்டித்தார். பேராசிரியரின் நானாடகம், இருநாடகம்—சுந்தரம் எங்கே, துரோ கிகள் (வெளிவராதவை) ஆதியன முழுமையாக சமுதாயப் பிரதி பலிப்பாகவும் சமூகத்தின் வெட்டுமுகத் தோற்றத்தைக் குறியிட்டுக் காட்டுவனவாகவும் உள்ளன.

தம்மை உயர்ந்தோர் எனக்கருதி மனமயக்கத்துடன் உலா விய கல்விவல்ல உயர்ந்தோர் குழாமில் உலாவிய பேராசிரியர் மக்களின் வாழ்வியல் அனுபவங்களில் ஊறித் தமது ஆக்கங்களை உருவாக்கியமை அவரது உள்ளுணர்வுப் பிரதிபலிப்பைக் காட்டு வதாகும். பேராசிரியரின் மனோநிலையை நுணுகி நோக்கிய ''சொக் கன்'' தமது பைந்தமிழ் வளர்த்த பதின்மர் என்னும் நூலிற் கூறி யுள்ள பின் வரும் வாசகங்கள் அவதானித்தற்குரியவை.

> ''பேராசிரியரோடு சில காலங்களாவது பழகியவர்களுக் கும் அவரது ஆழ்ந்த இன நாட்டுப்பற்று நன்கு புலனாகும். பேராதனைப் பல்கலைக்கழகச் சூழலில் வாழும் பொழுதும், யாழ்ப்பாணத்தின் கிராமமொன்றில் வாழும் சாதாரண நாட்டுப் புறத்தான் போன்றே அவர் தம்மைக் கருதிக் கொண்டார். தமது புலமையால் அமைந்த செயற்கையான மொழியிற் பேசாது முற்ற முழுக்க யாழ்ப்பாணத் தமிழிலே பேசுவது அவரின் இயல்பு, யாழ்ப்பாணச் சமூகத்திலே உயர் தோர், தாழ்ந்தோர், நடுத்தரவகுப்பினர் என்ற பல பிரி வினைச் சேர்ந்தவர்களோடும்பழகி அவர்களின் மனப் போக்கு களை சிந்தனைகளை யெல்லாம் நன்கு அறிந்திருந்தார். இந்த அனுபவ அறிவாலும் உள்ளுணர்வாலுமே தமக்கெனத் தனிப் பாதை வகுத்து அப்பாதையில் உயர்ந்த நாடகங்களை ஆக்குதல் அவர்க்கு எளிதாயிற்று''

பேராசிரியரின் நாடக ஆற்றலை வெளிக் கொணரும் உரைகல்லாகப் பல்கலைக்கழகம் விளங்கியது. சமுதாயத்தின் முன்னோடிகளாக விளங்க வேண்டிய பல்கலைக்கழக மாணவர்களின் மேடை நாடகத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் தமது மனச் சாட்சியின் பிரதிபலிப்பாகவும் சிந்தனை வெளிப் பாடாகவும் நாடகங்களை ஆக்கினார். நாட்டின் மூதுகெலும்பான பல்கலைக் கழக வட்டத்தின் முனையிலிருந்து கிளம்பிய பேராசிரியரின் சிந்தனைகள் சமகாலச் சிந்தனையோடு இயங்கியமை அவரின் தனித் தன்மை எனலாம். கடந்த காலச் சிந்தனைகளூடேயும் பேராசிரியர் புதுமையையே விரும்பினார். சுருங்கக் கூறினால் பேராசிரியர் மரபு வழிவந்த நவீனத்துவத்தை அவாவிய நாடகாசிரியர் எனலாம்.

பேராசிரியரின் சங்கிலி நாடகம் தேசியப் பின்னணியிலான பேராசிரியரின் பணிகளைக் காட்டுவதாகும். 1948ம் ஆண்டு பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற்ற ஈழம் எதிர்காலத்தில் இயங்க வேண்டிய வகையை வலியுறுத்தும் நோக்கிற், சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தை வலியுறுத்தப் பேராசிரியர் தலைப் பட்டார். நிகழ்கால வரலாறுகளைக் கூர்ந்து நோக்கிய பேராசிரியரின் தீர்க்க தரிசன உணர்வைச் சங்கிலி நாடகத்தின் பின்னணியிற் காணலாம். நாட்டுப் பற்றையும் விடுதலை வேட்கையையும் வேண்டி நின்ற பாரத நாட்டு மக்களுக்குத் தனது மூளையைப் பிசைந்து பாரதி பாஞ்சாலி சபதத்தைப் பாடியது போல பேராசிரியர் தமது சங்கிலி நாடகத்தை ஊடகமாகக் கொண்டு நின்று நிதானித்துப் பணியாற்றியுள்ளார். தேசிய ஒருமைப் பாட்டைப் பூடகமாக உணர்த்தும் இந்நாடகம் பேராசிரியரின் சிந்தனையையும் செயலையும் இனங்காண வைக்கின்றது.

இறுதியாக ஒரு குறிப்பு. யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழினை நாடகத்திற் புகுத்தி நாடகபாத்திரங்களுக்கு இயற்கைத் தன்மையினையும் யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழுக்கு இலக்கிய அந்தஸ்த்தையும் வழங்கியவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை; சமூக முரண்பாடுகளைக் குறியிட்டுக் காட்டும் பேராசிரியரின் பாத்திரங்களும் உரையாடல்களும் மாறிவரும் சமுதாயத்தைக் கோடிட்டுக் காட்டும் பணிகள் எனலாம்.

ஈழத்துத் தமிழியல் வரலாற்றில் வாழ்வு முற்றும் தமிழ் பணி என்ற உணர்வோடும் செயலார்வத்தோடும் பணியாற்றிய பேராசிரியர் தேசிய ஒருமைப் பாட்டின் சின்னமாகவும் கலாச்சார மறுமலர்ச்சியின் உந்து சத்தியாகவும், சமுதாயத்தைப் புத்தூக்கம் பெறச் செய்த மீகாமனாகவும் விளங்குகின்றார்.

[ஸ்ரீ இலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடாத்திய மறுமதிப்பீடு உரை வரிசையில் 22-7-74ல் ஆற்றிய உரை.]

# பலவீனம்

தேவன் — யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தின் மத்திய தரத்தின் கீழ்மட்டம் வசிக்கும் நெருக்கமான பகுதியொன்றில் ஒருநேர் சீரில்லாத குச்சொழுங்கை யொன்றில் ஒரு மண்வீட்டில் அழுகுரல் கேட்கிறது. பிள்ளைகளுக்கு சீதனம் கொடுப்பதற்கென்று துண்டு துண்டாக காணிகளைப் பிரித்துக்கொண்டே போனதனுல் அவை வீடு கட்டி, கிணறு தோண்ட சௌகரியமற்றனவாகவும் கோணல் மாணலாகவும் கிடந்தன: ஆகையால் அழுகுரல் வந்த வீடு எது என்று அனு மானிப்பது சிரமம். யாராவது நாட்கணக்காக சுகவீனமுற்றிருந் தாலாவது நிதானித்து விடலாம்.

''ஆரெணை செத்தது? அழுது கேட்குது''
''அதுதான் தங்கரத்தினத்தின்றை மனுசி''
''அந்த மனுசி போனதும் நல்லதுக்குத்தான்''
''ஏனணை அப்படிச் சொல்லுருய்?''
''பின்னை அந்தாளோடை என்னெண்டு காலந்தள்ளுறது''

அயல் பெண்டுகளின் வாஞெலி அஞ்சல் ஆரம்பமாயிற்று

x x x x

ஒரு அறை, ஒரு குசினி, ஒரு தலைவாசல், ஒரு விருந்தை என அமைக்கப்பட்டிருந்த வீட்டின் தலைவாசல் குந்தில் ஒரு கப்பில் சாய்ந்தபடி தங்கரத்தினம் உட்கார்ந்திருக்கிருர். நாற்பது வருஷங்களாக கூடவே வாழ்ந்து இன்ப துன்பத்தில் பங்குகொண்ட அவருடைய மனைவி — அவளுக்கும் பெயர் தங்கரத்தினம்தான்; பெயர்ப் பொருத்தமென்று தான் கல்யாணம் செய்து வைத்தார் களோ—வெள்ளைச் சீலையால் போர்த்தப்பட்டு சிலையாய் கிடக்கிருள். நாற்பது வருஷங்களாய் சம்பாதிச்சதுதான், ஒன்பது பிள்ளைகளைப் பெற்றெடுத்து வளர்த்ததுதான், கடைசிப் பெட்டை ராஜலட்சுமி யைத் தவிர எல்லாம் தோளுக்கு மிதந்து விட்டுதுகள், நல்லாய்த் திண்டதுதான், குடிச்சதுதான்—ஆனுல் ஒரு ஆமான வீடு கட்ட முடியவில்லை. ஒரு நாள் சீட்டுக் கட்டி வந்த காசிலை, நகரசபை உறுப்பினரைப் பிடிச்சு வீட்டுக்கு மின்சாரம் பூட்டினதும் தான் - ஆனுல் இப்ப அதையும் வெட்டிப்போட்டார்கள்: இரவு கொழுத்தி வைச்ச லாந்தர் 'மினுக் மினுக்' கென்று எரிந்துகொண்டிருந்தது. 'புசுக்' கென்று புகையைக்கக்கிவிட்டு அணைகிறது,

"அண்ணை, பாடைக்கே சொல்லி விட்டனிசீ! தண்டிகைதான் கட்டவேணும்''

''ஓ! நாலுபேர் பெரிய மனிசர் வருவார்கள்; அதுக்கேத்த மாதிரியிருக்கவேணும்.''

''செல்லப்பாவிட்டை தேவாரம் பாட வரச்சொல்லி விட்டனுன். அவங்களையும் ஒரு ஆறு பேர் வருவாங்கள்.''

''கோண்டாவில்லை யிருந்து இரண்டு கூட்டமும் அரியாலையிலிருந்து இரண்டு கூட்டமும் பறை மேளத்துக்கு சொல்லி விட்டனுன்.''

''பந்தல் போடுறவங்களை இன்னும் காணேல்லை. வெள்ளைகட்ட வண்ணுன் வந்திட்டானே.''

''சின்னுனிட்டை எறிவெடிக்குச் சொல்லியாச்சே?''

இளமையிலிருந்தே அவருக்கிருந்த நண்பர் கூட்டம் அப்படித்தான். செலவுகளைப் பெருக்க சுருக்க வழிநிறையத் தெரிந்தவர்கள்.

X X X X

இருபது மைல்களுக்கப்பால் இருந்த பெண்வீட்டிலிருந்து மயில் சோடனை செய்த 'செடன்' காரில் ஊர்வலம் வந்த கோலாகலம் அவருடைய மனதில் நிழலாடுகிறது. ஒன்றும் தெரியாத அப்பாவிக் கிராமப் பெண் தங்கம் பக்கத்தில் தூங்கிவழிந்து கொண்டிருந்ததும், அவளுடைய தம்பி – மாப்பிள்ளைத் தோழன் — உறங்கிக் கொண்டிருந்ததும், மாப்பிள்ளை வீடு நெருங்கியதும், பூரண கும்பங்கள், வரவேற்பு, மாலைகள், இவருடைய 'வால்' களின் அட்டகாசம். மாப்பிள்ளைக் கோலத்திலேயே ஒரு பீடியைப் பற்ற வைத்ததும், அதனுல் மாப்பிள்ளைத் தோழனுக்கு ஒரு சூடு போட்டதும் நண்பர்கள் சோடா என்று சொல்லி மற்றதில் கொஞ்சம் வார்த்துக் கொடுத்ததும், அதிலே ஒரு 'கிளாசை' தங்கத்துக்கு வற்புறுத்திக் கொடுத்ததும் இன்று நடந்தவை போலிருக்கின்றன.

''அவர் குடிக்கிறவர் என்று எனக்குத் தெரியும். அதிலையென்ன? இப்ப ஆர்தான் குடிக்காமலிருக்கினை?''

''ஆனு இப்பிடி ஆட்டத்திலை நித்தம் வீட்டுக்கு வந்தால் குடும்பம் எப்படி நடக்கும்?''

''குடிச்சா அவரென்ன கூத்தடிக்கிருரே? சும்மா பேசாமை வந்து படுத்திடுவார்.''

தங்கம் கல் ஆனுலும் கணவன் என்று ஏற்றுக்கொண்டாள் என்பதை நிரூபிக்க ஒட்டுக்கேட்ட இந்தச் சம்பாஷணை போதாதா?

ஆட்கள் ஓரிருவராக வரத் தொடங்கினர். சோர்ந்து போயிருந்த தங்கரத்தினத்தை 'உஷார்'ப்படுத்த நண்பர்கள் சோடா கொடுத்தனர். அவர் மோன நிலையில் மூழ்கிவிட்டார். வழக்கமாக கணக்காக இருந்தால் ஆட்களை அதிகாரம் பண்ணுவதும் மக்களை 'போ வா' என்பதும் கொஞ்சம் உரத்துப் பேசுவதும், அவர் சுபாவம். ஆனால் பின்னும் இரண்டுக்குப்பிறகு அயர்ந்து விடுவார். தன்னுடைய உழைப்பில் தன்மீதே பெரும் பகுதியைச் செலவு செய்து விடுகிறேனே என்ற உணர்வு விழிக்கும் போது தோன்றும். ஆகையால் கையில் காசு வந்ததும் துணி மணி, உணவுவகை, இறைச்சி, பழங்கள், என்று நிறைய வாங்கி வந்து கொட்டுவார். ஏதோ விரலின் வீக்கத்துக்குத் தகுந்தாப் போல் நகைநட்டுகளுக்கும் குறைவில்லை. அவர் அதிகம் படித்தவரல்ல. அவருடைய பிள்ளைகள் என்ன படிக்கிறார்கள் என்று அக்கறை காட்டவுமில்லை. ''என்னத்துக்குப் படிப்பு? ஒரு கடையிலை நிண்டாலும் நாலு காசு சம்பாதிக்கலாம். இந்த நாளையிலை 'பிஸினஸ் லைன்'ப் போல வராது. உங்கை படிச்சதுகள் படுத்துற பாட்டைக் காணேயில்லையே'' என்று இடைக்கிடை சொல்லுவார்.

கடைக்குட்டி கொஞ்சம் செல்லம், அவளுக்குத் தகப்பனிடத்தில் பயமும் குறைவு. அடக்கமும் குறைவு.

''அப்பர் இண்டைக்கு ஆடிக்கொண்டு வரட்டும், சொல்றன்'' என்பாள்.

''இஞ்சைபார், தகப்பனெண்டு மரியாதையில்லாமை.'' இது தங்கம்.

'பின்னைக் குடிச்சுப்போட்டு வந்து சத்தம் போடுகிறது மரியாதையே?''

''அவர் என்ன செய்யிறார்? ஆற்றையேன் காசிலை குடிக்கிறாரே? அவரில்லாட்டி உங்கடை பாடெல்லாம் என்னவாய் போகும்? இப்ப உனக்கென்ன குறை?''

படிப்பும் உலக அனுபவமுமில்லாத தங்கம் தன் குடும்பத்தை ஓட்டவைத்த மாயம் கணவனிடம் அவள் காட்டிய பக்தி தான்.

x x x x

''இன்றுவது குடிக்காமல் விட்டிருக்கலாம்'' என்ற எண்ணம் தங்கரத்தினத்துக்கு எழுந்தது. இனி யோசித்து என்ன? இப்படி குடிக்காமலிருக்க வேண்டுமென்ற வெறி சிலசமயம் ஏற்படும். இரண்டு மூன்று கிழமைகள் நல்ல பிள்ளையாக இருந்து விடுவார். ஆனல் பிறகு ஏதாவது ஒரு சின்ன விஷயம் அவரை நிலைகுலையச் செய்து விடும். அப்புறம் 'நிறைகலை' தான், திடீரென ஒரு நாள் பின்னேரம் கார் வரும். ''எல்லாரும் வெளிக்கிடுங்கோ கதிர்

காமத்துக்குப் போவம்'' என்பார். தங்கமும் பிள்ளைகளும் உடனே ஆயத்தமாக வேண்டியதுதான். பின்னேரம் நள்ளிரவாகும், கார் வரும், போத்திலும் கிளாசும் ''டாஷ்போர்டில்'' ஏறும், தனிக்காரில் கதிர்காம யாத்திரை ராஜ போகம் தான், இதுக்கெல்லாம் எப்படி வருகிறது போகிறது என்பது தங்கத்துக்குத் தெரியாது. ஏதேதோ 'பிஸினஸ்' பண்ணுகிறார், வருகிறது. போகிறது, இப்படியே முனீஸ்வரம், கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் எல்லாம் குடும்ப சமேதராகப் போய்வந்திருக்கிறார். அங்கெல்லாம் பக்திசிரத்தையோடு வழிபட்டாரோ என்பது தெரியாது. ஆனால் தங்கம் செய்த பிரார்த்தனைகள் தான் அவருக்கு ஆரோக்கியத்தையும் ஆயுளையும் அளித்திருக்க வேண்டும். வாசலில் வாழையை நிறுத்திக்கட்டுகிறார்கள்

''இந்த ஆள் ஏன்தான் இப்படி ஆடம்பரமாச் சிலவழிக்கிறதோ''

''ஏன்! இப்பவாவது சிலவழிக்கட்டன்.''

'அநியாயம் சொல்லப்படாது அந்தாள் வீட்டைக் கவனியாமல் விட்டதில்லை.''

''ஆனாலும் குடிச்சழிச்சது கொஞ்சமே.''

தங்கம் தலைநிமிர்த்த முடிந்திருந்தால் ஊர்வாய்க்கு முற்றுப் புள்ளி வைத்திருப்பாள்.

x x x x

பொற்சுண்ணமிடிக்கும்போது வழிந்த கண்ணீரை விரல்களினால் வழித்தெறிந்தார். 'தண்ணியில்' கண்ணீர் விடுபவரில்லாமலில்லை. இது அதுவோ? அப்படி இலேசில் சொல்லிவிடமுடியாது. இல்லாவிட்டால் சற்று முன்னர் கலியாணமான மகள் ஒருத்தி வாசலுக்கு வந்தபோது 'கோ' வெனக் கதறியழுதது கூடப் பொய் யென்றாகிவிடும். இலகுவில் நெகிழாமல், உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் 'மெய் மறந்த நிலையில்' காணப்படுபவர் போல் தென்பட்டாலும் உள்ளே இதயம் இல்லாமலா போய்விடும்?

''அண்ணை, ஒரு இருநூறு ரூபாய் காசெடு.''

''மூத்த மருமோனிட்டைக் கிடக்கு.''

''விறகுக் காரனுக்கு குடுத்துப்போட்டு இரண்டு சந்தனக் கட்டையும் எடுப்பிக்கப்போறன். காட்டிலை கம்பி குத்தப்போறவங்களிற்கும் ஏதாவது குடுக்கத்தானே வேணும்.''

''ஓ அதுகளிலை குறை வைக்காதை.''

பிள்ளைகளின் கல்யாணம், ருதுசாந்தி எல்லாமே கோலாகலமாகத்தான் செய்தார். பணச்சடங்கு என்று பெயர். சேர்ந்த பணம் செலவுக்கு போதுமானதாயிருந்ததோ? இல்லையோ?

இரண்டு மூன்று நாட்களுக்கு வீட்டில் இராஜோபசாரம்; செத்த வீட்டை எப்படி மட்டாக நடத்துவது?

X ▼ X X

கொள்ளி வைத்துவிட்டு மடத்தில் வந்து உட்கார்ந்தபோது அவருக்கு உள்ளேயும் மப்பு; வெளியே வானமும் மந்தாரமாயிருந்தது. சவத்தை வெளியே கொண்டுவரும்போது கடைக்குட்டி ராஜலட்சுமி கதறியழுததும் தன்னுடைய மச்சான் அவளைத் திமிற விடாமல் கட்டி உள்ளே இழுத்துச் சென்றதும் அவரை உலுக்கிவிட்டன. பக்கத்தில் அவரைத்தாங்கிக் கொண்டிருந்த நண்பனின் தோளில் சாய்ந்த தங்கரத்தினம் ''அவள் போட்டாளடா'' என்று தேம்பினர். ''உனக்கு நல்லகளை, இந்தா அண்ணை இதைக்குடி'' என்று எங்கிருந்து, எப்படி என்று தெரியாமல் வரவழைத்த கிளாசை அவருடைய கைக்குள் அழுத்தினன் நண்பன். 'மடக், மடக்'கென்று குடித்தார். பணம் பரிமாறல் சுடலையில் நடக்கும் வரை அவர் ஒரு தூணில் சாய்ந்திருந்தார். பத்தோ, நூறோ — யார் யாருக்கோ — அன்று வரை அவர் கணக்குப் பார்த்ததுமில்லை — வருமானவரிக் கந்தோருக்கு கணக்கெழுதுகிற வருமானமா அவருடையது? ''சரி, போவம்''. எழுந்து நடக்கிறார் கால்கள் பின்னுகின்றன.

''சீ! இந்த ஆளும் ஒரு மனுசனே? இண்டைக்கும் பார், கிறிப்போட்டு நிக்குது.''

''ஆம்பிளையள் அப்பிடித்தான் கண்டியோ? விடு சனியனை.''

''ஆனாலும் பத்துப்பேர் வாறபோற இடத்திலை கொஞ்சம் மரியாதையாயிருக்க வேண்டாமே?''

''ஏன் இப்ப அந்தாள் மரியாதைக்குறைவா என்ன செய்து போட்டுது?''

இது பெண்டுகள் பேச்சு. பலவீனமான அந்த மனிதர், பிரச்சினைகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறியபோதெல்லாம் குடியில் முடங்கிய அவருக்கு ஒரு வைராக்கியம் ஏற்பட்டது.

மறுநாள், காய்ந்த தோரணம் மாவிலை, வெயிலில் காய்ந்து கொண்டு கிடந்த வாழை. சரித்துவிட்ட தங்கம் படுத்திருந்த வாங்கு — இவற்றைப் பார்த்தபடி பேச்சு மூச்சற்று தங்கரத்தினம் இருந்தார். அன்று குடியைத் தொடவேயில்லை.

எத்தனை நாளைக்கு? இவரென்ன பீஷ்மரா? தங்கத்தைக் கேட்டால் தெரியும்.

# இளமை முடிவதில்லை

இ. இராஜகோபால் B. Sc. (Hons)


இளமையாக இருப்பதில்தான் மனிதனுக்கு எவ்வளவு ஆசை! இப்படியே இருக்கமாட்டோமா என ஏங்குவோர் எத்தனை பேர்? உதட்டுச் சாயங்கள், நரையை மறைக்க மைகள் ...... இவ்வளவு இருந்தும் கால ஓட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியுமா? அதுவும் முடியும் என விஞ்ஞானம் கூறுகின்றது.

அறிவியல் உலகையே வியக்கச் செய்த விஞ்ஞானமேதை ஐயின்ஸ்ரீனின் புகழ்பெற்ற கண்டு பிடிப்பான சார்பு நிலைக் கொள்கை (Theory of Relativity) இதற்குப் பக்கபலமாக உள்ளது. இக்கொள்கை காலத்தையும் வேகத்தையும் ஒன்றுக் கொன்று தொடர்பு படுத்துகின்றது. கால ஓட்டம் இயக்கத்தில் தங்கியுள்ளது. இக்கொள்கை காலப் பெருக்கம் (Time Dilation) எனப் படும்.

இதனைப் பின்வரும் பரிசோதனை மூலம் காட்டலாம் $C_1$, $C_2$ என்பன இரு ஒரே தன்மையதான கடிகாரங்கள். இவற்றில் $C_1$ பூமியிலும் $C_2$ விண்கல மொன்றிலும் பொருத்தப்படுகின்றது என வைத்துக் கொள்வோம். $C_1$, $C_2$ என்பன 12 மணியினைக் காட்டும் பொழுது விண்கலம் சடுதியாக 1,61,000 மைல் / செக். வேகத்தில் (ஒளியின் வேகம் 1,86,000 மைல் / செக். அண்மையாக) புறப்படுகிறது. பூமியிலுள்ள கடிகாரம் $C_1$ ஒரு மணியினைக் காட்டும் பொழுது விண்கலத்திலுள்ள கடிகாரம் 12 மணி 30 நிமிடம் காட்டும். எமது சாதாரண நோக்கில் இரு கடிகாரங்களுமே பிழையெனத் தோன்றலாம். ஆனல் இரு கடிகாரங்களுமே சரியானது. இது எவ்வாறு?


ஒளி வேகத்திற்கு அண்மையாகப் புகைவண்டி யொன்று புகையிரத மேடையை விட்டுப் புறப்படுகிறதென வைத்துக் கொள்வோம். இப்புகை வண்டியினுள் ஒருவர் மின்சூள் ஒளிக்கற்றையொன்றை நிலைக்குத்தாக கூரையிலுள்ள தளவாடிக்குச் செலுத்துகின்ருர். இந்நிகழ்ச்சியினை புகையிரத மேடையிலிருந்து ஒருவர் அவதானிக்கிருர். இவர்கள் இருவரினது நோக்கிலும் ஒளிக்கற்றையின் பாதை பின்வருமாறு இருக்கும்;

(அ) புகைவண்டியினுள் இருப்பவரது நோக்கு:




(ஆ) புகையிரத மேடையில் இருப்பவரது நோக்கு:

—> 1,61,000 மைல்/செக்.




மேலே படத்தில் காட்டியவற்றில் இருந்து புகைவண்டி நிலைய மேடையில் இருப்பவருக்குத் தோன்றும் பாதையானது புகைவண்டியின் உள்ளே இருப்பவருக்குத் தோன்றும் ஒளிக் கற்றையின் பாதையிலும் தூரம் கூடியதாகும். ஒளியின்வேகம் மாறிலியாகும். எனவே

$$\text{காலம்} = \frac{\text{தூரம்}}{\text{வேகம்}}$$

இங்கு ஒளியின் வேகம் மாறிலியாகையால் தூரம் கூடும்பொழுது காலம் குறைகின்றது. ஆகவே புகைவண்டியின் உள்ளே இருப்பவர் உணரும் ஒளிக்கற்றையின் பிரயாண காலத்திலும் பார்க்க புகையிரத மேடையில் இருந்து பார்ப்பவர் உணரும் ஒளிக் கற்றையின் சார்புப் பிரயாண காலம் கூடியதாகும்.

முந்திய பரிசோதனையில் $C_1$, $C_2$ என்ற இரு கடிகாரங்களுக்கிடையில் ஏற்பட்ட நேரவித்தியாசத்திற்கான காரணம் இப் புகை வண்டிப் பரிசோதனையால் விளக்கப்படுகின்றது.

எனவே ஒளிவேகத்திற்கு அண்மையாக இயங்கும் விண்கலமொன்றினுள் நடைபெறும் நிகழ்ச்சிகள் பூமிக்குச் சார்பாக ஒப்பிடுகையில் பூமியில் நடைபெறுவதிலும் பார்க்க மந்தகதியிலேயே நடைபெறும். எனவே விண்கலத்தினுள் இருப்பவரது இதயத் துடிப்பு, சீரண வேகம், உடல் முதிர்ச்சிகள் யாவும் பூமியில் உள்ளவர்களிலும் பார்க்க மந்தகதியிலேயே நடைபெறும். உதாரணமாக பூமியில் ஒரு செக்கனுக்கு 80 தடவை இருதயம் துடித்தால் இதே பூமி நேரத்தில் விண்கலத்தினுள் இருப்பவருக்கு 40 தடவைகளே இருதயம் துடிக்கும், இதனை விண்கலத்தில் உள்ளவர் உணரமாட்டார். ஏனெனில் அவருக்குத் தொடர்பாக நடைபெறும் நிகழ்ச்சிகள் யாவும் மந்த கதியிலேயே நடைபெறும், ஒளி வேகத்துக்கு அண்மையாகச் செல்லும் விண்கலமொன்றுடன் பூமியிலிருந்து தொடர்பு கொண்டால் இம் மந்த கதியினை உணரலாம்.

விண்கலத்தின் வேகம் அதிகரிக்கும் பொழுது காலஓட்டம் மந்தமடைகிறது விண்கலத்தின் வேகம் ஒளிவேகத்திற்குச் சமனாகும்பொழுது கால ஓட்டமே நின்றுவிடுகிறது. இந் நிலையில் பசி, தாகம், முதிர்ச்சி அடைதல் யாவும் நின்றுவிடும். எமது முன்னோர்கள், முனிவர்கள் கூறிய சிரஞ்சீவித்தன்மை என்றே இதனைக் கூறலாம்.

விண்கலத்தின் வேகம் ஒளியின் வேகத்தை விஞ்சும் பொழுது காலம் பின்னோக்கி ஓடுகின்றது. இளமையும் திரும்பலாம்.

ஆனல் இவை நடக்கக் கூடியவையா? இன்றைய விண்கலங்களின் வேகங்கள் ஒளியின் வேகத்தோடு ஒப்பிடுகையில் புறக்கணிக்கத்தக்க அளவாகவே இருக்கின்றது விண்கலமானது குறைந்தது ஒளிவேகத்திற்கு அண்மையாகவாவது சென்றால் தான் கால ஓட்டத்தின் மந்தகதி உணரப்படுகின்றன எனவே தற்போதைய விண்வெளிப் பிரயாணங்களில் இக்கால மந்தம் முற்றாக நடைபெறுவதில்லையென்றே கூறிவிடலாம்.

ஒளி வேகத்திலோ அல்லது ஒளியை விஞ்சிய வேகத்திலோ பிரயாணம் செய்தல் நடைபெற முடியாதது. இதனலேயே ஐயின்ஸ்ரின் பூமியில் உச்ச வேகம் ஒளிவேகம் எனக்கொண்டார்.

எதிர்காலத்தில் ஒளியின் வேகத்தில் 90 வீத வேகத்திலாவது ஒருவர் விண்மீன் ஒன்றுக்கு பிரயாணம் செய்கிறார் என வைத்துக் கொள்வோம். புவியிலிருந்து புறப்படும் பொழுது அவருடைய வயது 25. கி. பி. 2000 ஆண்டில் அவர் புறப்படுகிறார் விண்மீனுக்குச் சென்று திரும்பி வர அவருக்கு 12 பூமி ஆண்டுகள் செல்கின்றது எனக்கொள்வோம்.* கி. பி. 2012 ம் ஆண்டில் அவர் பூமியில் வந்து இறங்கும் பொழுது அவருடைய வயது 37 ஆக இருப்பதற்குப் பதிலாக 31 வயதாகவே இருக்கும். 37 வயதில் அவருக்கு ஏற்படக் கூடிய முதிர்ச்சிகள் இருக்காது.

இது நடக்கக் கூடியதா ? இன்றுவரை பரிசோதனை செய்ததில்லை. மாறும் உலகில் எதுதான் நடக்காது ? எமது எதிர்காலச் சந்ததியினர் அனுபவிக்கட்டும் ?

---

* மிக அண்மையிலுள்ள விண்மீனிலிருந்தே ஒளி பூமியை வந்தடைய 4½ ஆண்டுகள் செல்கின்றது.

## சிரிக்கவும் சிந்திக்கவும்

### தேர்தல்:

ஒருவர்: என்ன காரிலை போகிறவர் கைகாட்டிப் போட்டுப் போகிறார் உம்மைத் தெரியுமோ ?

மற்றவர்: சீ! அவருக்கு என்னைத் தெரியாது. அடுத்த தேர்தலிலை நிற்கப் போகிறார் போலை.

ஃ ஃ ஃ

### தாலாட்டு:

தாய்: ஆராரோ ஆரிரரோ ஆரடித்து நீரழுதீர் ... ... ... ஆராரோ

குழந்தை: தொடர்ந்து அழுகிறது.

தந்தை: கன்னியவள் இடையினிலே தண்ணிக் குடம் ... ...

குழந்தை: நித்திரையாகிறது.

எஸ். எஸ். பவான்

விரைவில் வெளிவருவது

"வீரகத்தி கீர்த்தனங்கள்"

இது

யாழ்ப்பாணம்
வாணி பண்டிதர் கல்லூரி
வெளியீடு

காலையிலும் மாலையிலும்

⁜ கலைவிஞ்ஞான வர்த்தக வகுப்புகள்
க. பொ. த. ப (சாதாரணம்)
க. பொ. த. ப (உயர்தரம்)

⁜ விசேட சிங்கள- ஆங்கில வகுப்புக்கள்

⁜ தமிழ் ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து வகுப்புக்கள்

யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி
107 பருத்தித்துறை வீதி
நல்லூர்

- மில்க்வைற் நீல சோப்
- நியூ மில்க்வைற் சோப்
- மில்க்வைற் பார் சோப்
- மில்க்வைற் சலவைப் பவுடர்
- மில்க்வைற் மெடிக்கேட்டட் சோப்
- மில்க்வைற் 30 சதம் சோப்
- மில்க்வைற் 15 சதம் சோப்

வாங்கிப்பாவித்து
அதிக லாபம் அடையுங்கள்




## மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7233 தந்தி: ''மில்க்வைற்''

கிளை: 79, மெசென்ஜர் வீதி' கொழும்பு - 12.
தொலைபேசி; 36063

1974— August

மில்க்வைற் சோப் மேலுறைகளில் திருக்குறள் அச்சிட்டு வருகின்றோம். சேகரித்துக் கொடுத்துப் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம்.